www.padippakam.com

# தாயகம்



ஆவணி 1993

விலை: 26/-

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


# தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய நாகரிகம்

10 - 8 - 1993 இதழ்: 25


## தீர்வும் தேவையும்

போரின் வடுப்புண்கள் ஆறாத பூமியாகவே பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் வாழும் பிரதேசங்கள் இருந்து வருகின்றன. தரையிலும், கடலிலும் வைத்து மக்கள் வதைத்து அழிக்கப்படும் கதை முடிய வில்லை. வான் தாக்குதலின் கோரமும் சிறிதும் குறையவில்லை. நீண்டுதொடரும் இப்போரின் துயரை நிறுத்தி ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். இதனை மீறி தீர்வின்றிப் போரைத் தொடரவே அரசு தொடர்ந்தும் முயல்கிறது.

இனப்பிரச்சினை இத்தகையதொரு நிலைக்கு வளர்வதற்கு தாமும் ஏதோ ஒரு வகையில் காரண மாக இருந்து வந்துள்ளதாக மூத்த அரசியல்வாதிகள் பலரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலாவது ஒப்புக் கொண்டுள்ளனர். இதுவரை எவரும் திருந்த முயல வில்லை. அரசியல் தீர்வை சொல்லிச் சொல்லியே ஆயு தப் படைகளைப் பலப்படுத்தி தமது ஆளுங்காலத்தை அவசரகாலச் சட்டத்தின் கீழ் முடித்திருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

தீர்வுக்கான தளங்கள் திம்புப் பேச்சு வார்த்தை, வட்டமேசை மாநாடு, இலங்கை இந்திய ஒப்பந்தம், சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக் குழு என்று பல நிலைகளிலும் தோல்வி கண்டு மீண்டும் அந்நிய உதவியை நாடும் நிலையில் வந்து நிற்கிறது. இது புதிய விடயமல்ல. 1978ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதி ஆட்சியின் கீழ்த்தான் தமிழர் வாழும் பகுதிகள் யுத்த களமாக்கப் பட்டதுடன், தெற்கில் தொழிலாளர் உரிமைகள் நசுக்கப்பட்டு நவகாலனித்துவ அமைப்பை நிலை நிறுத்த உறுதியான அடித்தளம் இடப்பட்டது.

எனவே தீர்வு பின்தள்ளப்படுவதற்கு அரசின் வர்க்க நலன் பேணும் பேரினவாத அடித்தளமே காரணமாகும். வெறும் பூகோள வரைபடத்தையும், வம்ச வரலாறுகளையும் அடிப்படையாகக் கொண்ட பேரினவாத தேசியத்தையே இவர்கள் ஏனைய இனத்தவர் மீது திணிக்க முயல்கின்றனா.

எழுத்துவடிவமற்ற மொழிகளுக்கே எழுத்துருவம் கொடுத்து சிறுபான்மை இனங்களின் சுய அடையாளங்களையும் சுதந்திரத்தையும் மதிக்கும் நாகரிக உலகில் பழமையான பண்பாட்டையும், மொழியையும் வாழ்விடத்தையும் கொண்ட தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமையை மறுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சியால் வளர்ச்சியடைந்த இந்த யுத்தநிலைக்கு அதே யுத்த ஒடுக்குமுறையைத் தொடர்வது என்றும் தீர்வாகாது. உரிமைக்கான தேவையில் இருந்து தொடங்கிய இவ் யுத்தநிலை தமிழ் மக்களின் உரிமைக்கான தீர்வை முன் வைப்பதன் மூலமே தீர்க்கப்பட முடியும்.

— ஆசிரியர்குழு

www.padippakam.com

# கங்கைகள் பாயாத எனது பூமி!

ரஞ்சகுமார்

முழு நேரமும் கொட்டக் கொட்ட விழித்தபடி.
இரவின் இரகசியங்களைக் கூட
கள்ளத்தனமாக ரசித்த எனது நகரம்!
இன்று பல்லுப் போன ஒரு கிழவியென
மூளியாகி
தினம் கொலையும் குருதியும் கண்டு
மூர்ச்சை போட்டு விழுந்தது.

சுற்றிலும் கடல்!
தினம் பெருகும் குருதிப் புனல்களால்
மேலும் உவர்ப்பாகிப் போகின்ற கடல்.
ஒரு வேசி போல
எமது செல்வங்களை யெல்லாம்
அடி மடிக்குள் ஒளித்து விட்டு,
— போர்க் கப்பல்களை —
'ஒழித்து விடுவோம்!' என வெஞ்சினம் உரைத்து
தீப்பிழம்புகளைக் கக்கும் படகுகளை —
முதுகில் சுமந்து கொண்டு
வெட்கமற்று ஒய்யாரம் காட்டும் ஒரு மினிக்கி!

கங்கைகள் எனது பூமிக்கு சிற்றன்னைகள்!
ஒர வஞ்சனை!
வான் நோக்கி வாய் பிழந்தபடி
ஒருதலைக் காதல் கொண்ட எனது பூமி மேல்
ஏதற்காக மோகம் கொண்டனர்......?
பருவம் எய்தாமல் ஏங்கும் ஒரு பெண்ணைப் போல,
எனது பூமியின் தாபங்கள் —
கங்கைகள் தழுவாத எனது பூமி!

எனது தேசத்தின் அழகிய பட்சிகள்
வேட்டொலிகளால் வெகுண்டு
ஏதோ ஒரு திசையில் பறந்து மறைந்தன.
வானம் வல்லூறுகளாலும்
கழுகுகளாலும் நிறைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

சிவப்புக் கழுகுகள்!
இளங்குருத்துகளின் தலைகளைக் கொய்ய
குண்டுகளை விசிறி விதைத்து விட்டுப் போகின்ற
சிவப்புக் கழுகுகள்,
பனை மரங்களைக் கூட —
மொட்டையடித்துப் பழிப்புக் காட்டி
ஏளனம் செய்து நகைத்தபடி
'விர்' எனப் பறக்கும்
சிவப்புக் கழுகுகள்!
நாறும் பிணங்களைப் பிடுங்க
வல்லூறுகள்!

கரும் மரண விழிம்புகளின் மேல் மனிதர்கள்,
எனது மனிதர்கள்!
'கிரீச்' சிட்டு அலறும் பெண்களுடன்
பயபிராந்தியுடன் விழிக்கும் கிழவர்கள்.
கொழுந்து விட்டுச் சடசடத்து எரியும்
நரக நெருப்பின் மீது
பிய்த்து உதறப் படும்
மலர் முகைகளைப் போன்று குழந்தைகள்!
ஐயோ!
தினம் அக்கினி பூக்கும் எனது பூமியில்
இனியும் பிறக்கப் போகும் குழந்தைகள்......?

நெஞ்சுரம் கொண்ட மக்களை விட,
மரித்த மறுகணம் மக்கள் மனங்களில்
உயிர்க்க இருக்கிற
சில புதல்வர்களை விட,
எனது பூமியில் இன்று
என்னதான் உண்டு?

பூக்கள் மலர்வது எப்போ?
ஓ! புகைந்து கொண்டிருக்கும்
எனது பூமியில்
பூக்கள் மலர்வது எப்போ.
மீண்டும் பூக்கள் மலர்வது எப்போ?

★



படிப்பகம்

www.padippakam.com

# நினைப்பு '93'

தணிகையன்

பத்து ஆண்டுகள் தொடரும் இப்போரிலே
எத்தனை ஆயிரம் இன்னுயிர் போயின
பனிப்புகாரென மறைந்து போனவர்
நினைப்பு மட்டுமே நெஞ்சில் இருக்குது.

இனித் துயரிலா இனிய நாளிலே
எமைப் பிரிந்தவர் யாவரும் கூடியே
மகிழ்ச்சி கீதங்கள் பாடி ஆடிட
மனத்திலே எழும் ஆவல்கள் தீருமா?

இடிந்தழிந்த நம் நகர் கிராமங்கள்
எழுந்து பொலிவுடன் என்று நிமிர்ந்திடும்
இருளைத் துளாவிடும் எமது கண்களில்
ஒளிவிடும் தாரகை என்று தெரிந்திடும்

தீரும் துயரெனக் காலங்கள் நீளுது
தொடரும் போரிலே சாவுகள் கூடுது
தீர்வில் லாது போரினால் அமைதியை
திணிக்க முயன்றிடில் தோல்வியே நிச்சயம்.

இந்த மண்ணிலே எங்கள் உரிமையை
இன்னும் ஏன் இவர் ஏற்க மறுக்கிறார்
எத்தனை ஆயிரம் இழந்தும் இச்சந்ததி
உரிமை இழந்தொரு வாழ்வினை ஏற்குமா?

★



படிப்பகம்

www.padippakam.com

# கணக்கு

சாலி

'கடமையைச்செய், பலனை எதிர் பாராதே', ம்... நல்ல வசனம். யார் சொன்னார்! ஓ பாரதத்திலே... ஆரோ சொன்னான். இதெல்லாம் எனக்கு இப்ப எதுக்கு? இதை விடுவம்

காலையில் வாத்தியார் சொன்னது மீண்டும் மனதுக்குள் புகைந்து எரிந்தது. வசனத்தின் மீதா, அல்லது வாத்தியாரிலா, அல்லது உலகத்தின் மீதா, அதுவும் புரியவில்லை.

ஓ... பாரதத்திலே கர்ணன் சொன்னான். 'கடமையைச் செய், பலனை எதிர் பாராதே' என்று. எப்ப சொன்னான். போர் நடக்கும் வேளையில். அப்படியென்றால் கொலை செய் என்று கடவுள் சொன்னாரா? கர்ணன் கிருஷ்ண அவதாரம் தானே.

இல்லையில்லை அது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான யுத்தத்தின் போது சொல்லப்பட்டது, இப்பதான் புரியுது.

அவன் தான் சொல்லி சண்டைபிடிச்சு, ஒரு கதையை உண்டாக்கிப் போட்டு போட்டாங்கள். அது அப்ப நடந்தது. அதுக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம்? அந்த வசனத்தை இதுக்குப் போய் இந்த வாத்தியார் சொல்லிச்சே...!

வாத்தியாருக்கு மூளையில்லையா? அல்லது எனக்குத்தான் மூளையில்லையா? வாத்தியாருக்குத்தான் ஒன்றுமில்லை.

தொழில். பெரிய தொழில். இல்ல உத்தியோகம். மக்களை ஏமாற்றும் முதலாளியின் இயந்திரம்தான் நான்.

இயந்திரம் என்றபடியால் தான் வாத்தியாரும் அப்படிச் சொன்னாரோ? நான் ஏன் இதையெல்லாம் போய் அவரிட்டச் சொன்னேன்? ஓ... அவர்தான் எனக்கு இந்தத் தொழிலை இல்ல இந்த உத்தியோகத்தை எடுத்துத் தந்தவர்.

விசுவாசம் இருக்கத்தானே வேணும்.





படிப்பகம்

www.padippakam.com

நன்றியுணர்வு இருக்கத் தானே வேணும்.

நன்மையோ தீமையோ அவரிட்டச் சொல்லத்தானே வேணும். வேலையை விட்டு விட்டா ஏன்ரா வேலையை விட்டனி? என்ன நடந்தது, எனக்கொரு சொல்லுச் சொல்லாதயன்ரா என்று கேட்டாலும் கேட்பார் தானே. கேட்பார். நிச்சயம் கேட்பார்.

காலை ஐந்து மணிக்கு எழும்பி, குளித்து ஆறுமணிக்கு புறப்பட்டால்தான் ஏழுமணிக்கு போய்ச் சேரலாம். ஹுபிறிகேசன் சேர்விசில் கணக்குப் போட்டு காசு வாங்கும் வேலை எனக்கு.

சில நேரம் காலைச்சாப்பாடு கிடையாது. அம்மாவின் சமையலும் சில நேரங்களில் என்னுடைய நேரத்தை தாண்டிச் சென்று விடும். ஆறு மணியானால் எப்படிச் சாப்பிடுறது? நேரம் சென்றால் முதலாளி துள்ளுவார். பிந்திப்போன கோபத்தை ஒவ்வொரு விடயத்திலும் அன்று முழுக்க முதலாளி காட்டிக் கொண்டேயிருப்பான். அதிலும் பார்க்க சாப்பிடாமல் நேரத்துக்கே போய் விடுவேன்.

வாத்தியாரும் சொன்னார். 'ஒழுங்கா நேரத்துக்கு வேலைக்குப் போக வேணும். வேலையை ஒழுகாச் செய்யவேணும். பேந்து எனக்கு கெட்ட பெயரை வேண்டித்தந்து விடாதை. அவன் என்ர சிநேகிதன்'

நேரம், வேலை இந்த இரண்டிலையும் நான் ஒழுங்குதான். ஆனால்... எல்லாவற்றையும் யோசிக்கேக்க குளப்பமாகவே இருக்கிறது.

உடம்புக்கு நேரத்துக்கு சாப்பாடு இல்லை. சாப்பிட்டால் நேரத்துக்கு வேலைக்கு போக முடியாது.

களைச்சால் சிறிது நேரம் ஓய்வாக இருக்க முடியாது. இருந்தால் வேலையில் ஒழுங்கு இல்லையாம்.

சாப்பாடு, களை இந்த இரண்டும் என்னைத்தானே, என்னுடம்பைத்தானே பாதிக்குது. என்னுடம்பை வருத்தி முதலாளிக்கா உழைக்கிறன். அதற்கேற்ற சம்பளம் இல்லை.

முன்பும் இப்படித்தான். என்னுடைய வேலைக்கு, எனக்கு சம்பளம் காணாது. முதலாளியிடம் கேட்போமா. அல்லது வேலையை விடுவோமா ம்பளம் காணாது என்று. வேலையை விட்டு விட்டு வாத்தியாருக்கு என்ன பதில் சொல்லுறது. எனக்கு முன்னரே வந்து சொல்லியிருக்கலாமே என்று கேட்டாலும் கேட்பார். என் வேலையை நான் விடவும் எனக்கு சுதந்திரம் இல்லப் போல.

ஏன்? வாத்தியாரிட்ட இதை சொல்லுவான். அவரிட்டச் சொல்லாமல் முதலாளியிட்டையே சொல்லி முதலாளி செய்





படிப்பகம்

www.padippakam.com

யாட்டில் பின்னர் மார்த்தி யிட்டை சொல்லலாம் என்றும் தோன்றியது.

ஆச்சரியம், ஆச்சரியமாகவே இருந்தது. கோரிய தொகையில் பாதியை உடனே கூட்டித் தந்து விட்டார். ஆனாலும் என்ன பாகிதானே, நான்தான் தவறு விட்டுவிட்டன். இன்னும் கூடிய தொகையைக் கேட்டிருந்தா நான் எதிர்பார்த்த தொகை கிடைச்சிருக்கும். சரி இப்போ தைக்கு இது போதும் என்றிருந்தது ஆனாலும் சம்பளம் காணாதது காணாதது தான்.

பிறகு பார்ப்போம் என்று விட்டுவிட்டேன். ஆனால் சம்பள அதிகரிப்பின் பின்னர் இப்படி இருக்கும் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை.

அன்றைய சம்பவத்தின்பின் முதலாளியை நினைக்கும் போதும், பார்க்கும் போதும் மனிதத்தன்மையற்ற ஒரு ஆளாகவே எனக்குத்தெரிந்தது.

''என்ன மூர்த்தி இந்த நேரமா வேலைக்கு வாறது''

''சயிக்கில் காததுப் போட் இது ஒட்டிக் கொண்டிருந்ததால நேரம் போட்டுது''

''அத வேளைக்குப் பார்த்து ஒட்டியிருக்கலாமே''

''இல்ல சேர் வாற வழியில தான் முள்ளுக்குத்திச்சு''

''சரி சரி போ வேலையைச் செய், எனிமே உந்தச் சாட்டுச் சொல்லக்கூடாது''

என்னது சாட்டா இது. நெஞ்சில ஒரு இடி. அந்த இடியை அப்படியே முதலாளியின் முன்னால் கொடுக்க வேணும் போல ஒரு வெறி. மனம் கொதித்தது. எனினும் என்ன செய்ய சண்டை பிடிக்கவா வந்தேன். அடக்கிக் கொண்டு அமைதியாக நடந்தேன்.

கதிரையில் போய் அமர்ந்த எனக்கு முதலாளியின் வார்த்தைகளை மறக்க முடியாமலே இருந்தது.

''என்ன கிளாக்கரைய்யா யோசிக்கிறீங்க, பதினெட்டுப் போத்தல் ஒயிலும். இரண்டு பில்டரும் கொடுங்க''

எடுத்துக் கொடுத்தேன்.

''என்ன கிளாக்கர் புதுசைக் கொடுக்கிறீங்க? ஆட்களில்லாட்டி பழசத்தானே போட்டுவிட்டு. புதுசெண்டு சொல்ல வேணுமெண்டு முதலாளி சொல்லியிருக்கிறார்''

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கிளாக்கருக்கு என்னவோ நடந்திட்டுது என்று பார்ப்பது போல் பார்த்தான்.

'வாற ஒருவனுக்காவது நேர்மையாச் செய்வோம்' என்று சொல்ல நினைத்தேன். பின்னர்



படிப்பகம்

www.padippakam.com

சரியில்லை சொல்வது என்று தோன்றியது. கேட்டவனின் பார்வை எதையோ தேடியது.

''இந்தா இதுதான் இருக்கு. கொண்டு போய்ப் போடு என்றேன்''

''ஏன் கிளாக்கர் அங்க இருக்கே பழசு''

' இப்ப நான் சொல்லுறன் இதைக் கொண்டு போய்ப் போடு''

அவன் பேச்சு மூச்சில்லாமல் அதைத் தூக்கிக் கொண்டு நடந்தான். அநியாயம் செய்யும் முதலாளியோட சேர்ந்து இவையும் வேற. வந்துவிட்டுப் போன தொழிலாளியை நினைக்க வேதனையாகவே இருந்தது இருந்தும் என்ன செய்யிறது? பாவங்கள். இவர்கள் என்னைப் போல பிழைக்க வழியில்லாதவர்கள்.

தொழில், பொய்யும் பாளியும் சேர்த்து உருட்டிய தொழில். என்ன செய்ய? எங்களின்ர நிலை இப்படித்தான்.

''என்ன மூத்தி நீ செய்க வேலை? உன்ன விட்டா நீ என்னை இதப் பூட்டிப் போட்டு போகச் செய்வா போல''

அதை எப்படியோ அறிந்து கொண்ட முதலாளி அன்று பின்னேரம் வெறி நாயாக நின்றான்.

''இப்படி எத்தனை தரம் செய்திருப்பா, நீ வந்தால் நான் சொல்லுற வேலையைச் செய். உனக்கு இஸ்டமில்லாட்டிச் சொல்லு நான் வேற ஆளைப் பார்க்கிறன்.''

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. வேலையை விட்டால் வயித்துக்கு வழி என்ன? இதை நம்பித்தானே இல்ல என்னை நம்பித் தானே என்னுடைய அம்மா சகோதரங்கள் இருக்கினம். இதைவிட்டால் வீட்டுக்காறரெல்லாம் மருந்து குடிக்க வேண்டியது தான்.

மானமற்ற இடத்தில் வைத்து என்னை வெருட்டும் ஒரு கொள்ளைக்காறன் போல முதலாளி அப்போது இருந்தார்.

''இனிமே நீ இப்பிடிச் செய்தா உன்ர சம்பளத்தில தான் வெட்டுவன். இல்லாட்டி நீ பேசாமல் சொல்லிப் போட்டு நிற்கலாம்.''

எனக்கென்ன ஒண்டும் இல்லையென்று நினைக்கிறார் இந்த முதலாளி. இப்படியான பேச்சை கேட்க. நான் என்ன செய்தேன்? கொலை செய்தேனா? இல்ல கொள்ளை அடிச்சேனா?

அநியாயம் செய்யச் சொல்லுற இதுவும் ஒரு தொழிலா? நேர்மையாக நடக்க வேண்டாம் எண்டா இவ்வளவு கிட்டுக் கிட்டுறார். எது தர்மம்? எது அதர்மம் எண்டு தெரியேல்லை.

பெருமழை ஓய்ந்து தூறலும் நின்று போன மாதிரி இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

முதலாளியின் அமைதி. என்றா லும் எனக்குள் அது ஓயாமலே இருந்தது.

''இருப்புக் கணக்குகளை யெல்லாம் கொண்டு வா''

எல்லாம் முடிஞ்சு போச்சுது என்று தான் நினைத்தேன்.

''என்ன இந்த மாதத்தில் ஒரு பரல்ல இவ்வளவு குறைஞ்சி ருக்கு, போன மாதத்திலையும் ஒரு பரல்ல குறைஞ்சிருக்கு. எல் லாமா பதினைஞ்சு போத்தல் குறைஞ்சிருக்கு. இதெல்லாம் எங்க போனது''

பீப்பாவில வரும் போது லீற்றரிலதான் வரும். அது போத்தல் கணக்கு எடுக்கும்போ து சில பீப்பா கூடும் குறையும். இதற்கு முந்தின பீப்பா முடிவுக் கணக்கு எல்லாம் கூடுதலாகவே இருந்தது. இந்த இரண்டும் தான் குறைஞ்சு போனது. குறைஞ்சது என்னுடைய பிழையா?

''என்னபேசாமல் நிக்கிறீர். இது எங்க போட்டுது?'

தெரிந்து கொண்டே கேக் கும் போது எனக்கு என்ன பேச வேண்டியிருக்கு'

''இந்தா'' சுழட்டி எறிந் தார் கொப்பியை. ''எனிமேல் ஒழுங்காக வேலையைச் செய். இண்டையக் கணக்கையும் எழு திப் போட்டுப்போ''

எழுதி, எல்லாம் முடித்த போது நேரம் ஆறுமணியாகி விட்டது. வழமையா ஐந்து மணிக்குத்தான் என்னுடைய வேலைமுடியும் நேரம். ஆனால் எப்போதெல்லாம் ஆறு ஆறரை செல்லும், முதலாளி போகலாம் என்றால் தான். எல்லாம் சம் பள உயர்வின் பலன்.

வேலை நேரம் அதிகப்படி சம்பளம் இப்போது காணவே காணாது.வேலையா இது? மக் களை ஏமாத்திப் பிழைக்கும் தொழில்.

வியாபாரத்தில் சம்பளம், வாடகை, வரி போன்றவற்றை தீர்மானித்து விலையை நிர்ண யிப்பதே முறை ஆனால் இவர் கள் மக்களைத் இன்னும் பிசா சுகள். உண்மையில் எவ்வளவு நம்பிக்கையோடு ஒரு வாடிக்கை யாளன் வருகிறான். என்னென்று மனம் வந்து பொய் பேச முடிகி றது. வாடிக்கையாளன் நிலை யை நாங்களாக நினைக்காப் பார்த்தால் என்ன? அப்போது நாங்கள் அதை ஏற்றுக் கொள் வோமா?

எவ்வளவு பெரிய பாவம், பழி. இதெல்லாம் எனக்குத் தானே. நான்தானே செய்கி றேன். முதலாளி சொல்லி நான் செய்கிறேன் என்று சொன்னால் யாராவது நீதி என்று ஏற்றுக் கொள்வார்களா? ஏன் எனக் கென்று நீதி நியாயம் ஒன்றுமில்



படிப்பகம்

www.padippakam.com

லையா. கடவுளால் இதை நியாயப்படுத்த முடியுமா?

இப்படித்தானே வாத்தியாரிடம் கேட்டேன். அவரே சொன்னார். கடவுளே சொன்னது எண்டு சொன்னார். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்று. இன்னும் வேற சொன்னார் கௌசிக முனிவரைப்பற்றிச் சொன்னார். கண்ணப்ப நாயனாரைப் பற்றிச் சொன்னார். அது மட்டுமல்ல 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று கூடச் சொன்னார். மக்களை ஏமாற்றும் தொழில் தெய்வமாம்.

அப்படியென்றால் கடவுளே அநியாயங்களைச் செய் என்று சொல்லி அங்கீகரித்து விட்டாரா. எவ்வள பெரிய தத்துவ வசனங்கள். எல்லாமே பொய். உலகமே பொய். இப்பத்தான் எனக்கு விளங்குகிறது கடவுளும் எங்களைப் போல காசுள்ளவர்களை நம்பித்தான் வாழுறார் போல.

பின்னேரம் இதற்கு வாத்தியார் என்ன சொல்லுறார் என்று பார்ப்பம்.

''மூர்த்தி இப்ப நீர் வேலையைப்பற்றிக் கதைக்கப் போறீரோ? கடவுளைப்பற்றி கதைக்கப் போறீரோ''

''எனக்கு வேலையும் சம்பளமும் தான் வேணும். ஆனால் நீங்கள் தான் கடவுளை இதுக்கை இழுத்து விடுறியள்''

''நான் இழுக்கவில்லை. அது இணைந்து கொண்டதோ, இணைக்கப்பட்டதோ எனக்குத் தெரியாது. ஏனென்றால் கடவுளை நல்லவனும் கும்பிடுகிறான். கொலை, களவு செய்பவனும் கும்பிட்டு விட்டுத்தான் செய்யுறான். ஏன் உம்முடைய முதலாளி கும்பிடுறதில்லையா?''

''ஓம் முதலாளியின் அறையில் லட்சுமி, பிள்ளையார், முருகன் படங்கள் இருக்கு. முன்னால் நின்று தேவாரம் வேற அவர் மனதுக்குள் பாடுறவர்''

''இப்போது இதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? இது ஒரு சமயத்தில் மாத்திரமல்ல எல்லாச் சமயத்திலையும் இப்படித்தான்''

''அப்ப கடவுள் அதை அங்கீகரித்து விட்டார் என்றா சொல்கிறீர்கள்''

''அதுவும் இல்லை''

''அப்படியெண்டால்?''

''முதலில் உம்முடைய விடயத்திற்கு இது தேவையற்ற விடயம். சிலர் கடவுளைப் பற்றிச் சொன்னால் அப்படியே நம்பி விடுவார்கள். நீரும் அப்படித்தான் இருப்பீர் என்று நினைச்சன். ஆனால் நீர் அப்படியில்லை என்பது இப்போது புரிகிறது. சரி அத விடுவோம். இப்ப உனக்கு என்ன வேணும். பொய்யும் புரட்டும் எல்லா இடமும் இருக்குதுதான். அதை நானும் நீரும் உணர்ந்து ஒண்

www.padippakam.com

டும் செய்ய ஏலாது என்பதை நீர் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுரண்டும் வர்க்கம் இருக்கும் வரை இது இருந்து கொண்டே தான் இருக்கும். மூர்த்தி எனக்கும் ஆசை தான் உன்னைப் போல நேர்மையான சுரண்டலற்ற சமுதாயத்தைப் பார்க்க வேணுமென்று. ஆனால் இருவராலும் முடியுமோ? முடியாது. நீர் மாத்திரமல்ல உலகத்தில எத்தனையோ தொழிலாளர் இப்படித்தான் இதற்கு பல காரணங்கள் இருக்கு. ஆனால் அத நான் நினைத்து நீர் நினைத்து ஒன்றுமே செய்ய ஏலாது எனவே இதவிடுவோம்.

''நீர் ஒழுங்காக வேலைக்கு போறனீர் தானே. உம்முடைய பிரச்சனை நீர் அவரிட்ட நேர சொல்லும். உன்னுடைய திறமையைப் பார்த்து உன்னை விட ஏலாமல் ன்ர கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுவான். அதவிட நான் இதில் கதைக்க முடியாது. ஏனென்றால் அவங்கள் காசோட சாகிறவங்கள்''

வாத்தியார் சொல்லுறது உண்மையாகவே நடக்குமா என்பதில் எனக்கு சந்தேகமாகவே இருந்தது.

சம்பள அதிகரிப்பு அல்லது எட்டுமணித்தியால வேலை இது தான் என்னுடைய மிகக் குறைஞ்ச கோரிக்கை. கேட்டு இல்லையென்றால்... ச்சி கேளாமல் விடுவதும் சரியில்லை. நெடுகலும் இப்படிக் கஸ்ரப்பட ஏலாது. கேட்டுத் தான் பார்ப்போமே

''இது தான் வேலை, இது தான் சம்பளம், விருப்பமில்லாட்டி நீர் போகலாம். உம்மை நான இஞ்ச கெஞ்சேல''

கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை இப்பிடிச் சொல்லுவார் என்று. எவ்வளவு சுலபமாக சொல்லிப் போட்டார். நன்றியுணர்ச்சி கூட இல்லை. இந்தச் சொல்லுக்காகவா இவ்வளவு மாடா உழைச்சேன். ச்சி பாவம் செய்து, பழி சேர்த்து என்னுடம்பை வருத்தியது தான் மிச்சம்.

என்ன செய்வது? போ என்று சொன்னாப் பிறகும் என்னால் போக முடியுதில்லையே. நான் எங்க போவன்.

''என்ன யோசிக்கிறீர். விருப்பமெண்டா வேலையைச் செய்யும் இல்லாட்டி வேற இடத்தைப் பாரும். போம் இதில நில்லாதையும்''

நான் எங்க போவன். வாத்தியார் சொன்ன மாதிரி 'உன்னுடைய முதலாளி மாத்திரமல்ல எங்குமே இப்பிடித்தான்' வேலையை விட்டால் வயித்துக்கு... ஒரு வயிறா ஒரு குடும்பமல்லவா... ம் என்ன செய்ய...

இயந்திரம் போல கதிரையில் போய் அமர்கிறேன். மேசை



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு அணை தயாராகிறது

தயா பவர்

அந்த அணை எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.
என் வாழ்வு புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கிழக்கு வெளுக்கிறது
வறண்டு கிடக்கிறது என் கல் உரல்
இன்றைய உணவிற்காக
நான் சேகரித்துக் கொண்டிருக்கிறேன்
நேற்றைய தவிட்டை.

கிழக்கு வெளுக்கிறது
வடிந்து மடிகிறது என் உற்சாகம்
இடுப்பில் கைக்குழந்தை உதைக்க
ழியோரம் கண்ணீர் பெருக்கெடுக்க
நான் போகிறேன் அணைக்கட்டு வேலைக்கு.

கிழக்கு வெளுக்கிறது
கம்பீரமாக நிற்கிறது கட்டி முடிக்கப்பட்டுவிட்ட அணை
சூழுற்று கிடக்கின்றன கரும்புப் பயிர்கள்
அத்துவான காட்டில் நான் நடக்கிறேன்
வெறுங்காலுடன் ஒரு பானை குடி நீருக்காக.

அந்த அணை கட்டி முடிக்கப்பட்டு விட்டது.
என் வாழ்வு புதைக்கப்பட்டு விட்டது.

நன்றி
(மூன்றாம் உலக குரல் கவிதைத் தொகுதியிலிருந்து)

---

யில் உள்ள கணக்குக் கொப்பி களை எடுத்து விரித்துப் பார்க் கிறேன். சித்திர புத்திரனாரின் கணக்குப் புத்தகத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் இந்த ஏற்றத் தாழ்வுக் கணக்கு எங் கும் நீண்டு கொண்டேதான் போகிறது. இந்தக் கணக்கை எப்படி சரிப்படுத்துவது..? வாத் தியார் சொன்ன மாதிரி 'உதுகள ஒரு சிலர் உணர்ந்து ஒண்டும் செய்ய ஏலாது. எல்லாரும் உணரும் காலம் வருமா ...? O



படிப்பகம்

www.padippakam.com

# தோழமை இயக்கம்

நவசித்தன்

நாளும் பொழுதும்
எனக்காக
தானும் உழைக்கும்
என் தோழன்

பிரேக் இல்லை
ஒலிக்கும் மணி இல்லை
ஸ்டாண்ட் இல்லை
சுழலும் பெடல் இல்லை
என்னைப் போல்
நலிந்து மெலிந்து
பெயர் சொல்ல
இரு சக்கரம் பூட்டிய
சயிக்கிள் கூடு

மஞ்சள், நுணா,
மா, மருது படுநாவல்
பற்றைக் கிஞ்ஞா
தலைக்கு மேலாக
அடுக்கிய விறகுகள்
முதுகை முட்ட
முன்னும் பின்னும்
குனிந்து சரிந்து
முக்கி மிதிக்க
மூச்சு இளைக்கும்

கிகி கிகி... கடக் கடக்
கிகி கிகி... கடக் கடக்
இயலாமையின்
ஈனக் குரலுடன்
இரவும் பகலும்
ஓய்வின்றி உழைக்கும்
என் இரும்புப் பிறவி

புதுக்காடு பளை தாண்ட
கச்சாய் வெளியும்
கடந்து வரும் ஏற்றங்கள்
நெஞ்சை உலுப்பும்

கைதடி நாவற்குழி
செம்மணி வெளிகளில்
ஊதி எதிர்க்கும் பெருங் காற்று
உயிரை எடுக்கும்

விறகுச் சுமையின்
விற்பனைக் கணக்காய்வு
வேதனையில் ஆழ்த்தும்
வெற்றிடமாய்ப் போன
வயிறு கொதிக்கும்
இன்றைய பொழுதுக்கே
இது எதனை
ஈடு செய்யும்
என்ற ஏக்கப் பெரு மூச்சு
காற்றில் கலக்கும்

ஒரு பொழுது
எம் தோழமையின்
இயக்கம் ஓய்ந்தால்
அன்றே நம் அடுப்பில்
பூனை படுக்கும்
நடுத் தெருவிலும்
நாம் சரியலாம்
இருந்தும்
நாளைய பொழுது எனும்
நம்பிக்கை தான்
எம் இயக்கம்.

★





படிப்பகம்

www.padippakam.com

## பண்பாட்டின் பேரால் ... 3

# விடுதலை என்ற விழுமியம்

முருகையன்

செந்திருவின் கையிலே தோரணம் பின்னிய குருத்தோலைகள் மூன்று இருந்தன. அவள் எதையோ நினைத்துத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டிருப்பவள் போலத் தோன்றினாள்.

"பாயிலே இரு பிள்ளை" என்றார் அப்பு. "கையிலே என்ன ஓலைகள்?" என்றும் கேட்டு வைத்தார்.

செந்திரு சொல்கிறாள். "எனக்கு எல்லாமே ஒரே குழப்பமாய் இருக்கு. இந்தத் தோரணம் கலியாண வீட்டுக்கு கட்டினது; இது செத்த வீட்டுக்கு; இது சாமத்திய வீட்டுக்கு. மூன்றும் ஒரே மாதிரியாய்த் தானே பின்னுப்பட்டிருக்கு! கதிரவேல் அண்ணர் சொல்லுறார் செத்த வீட்டுத் தோரணங்களுக்கு இந்தச்சிறகுகள் மேல் நோக்கி இருக்க வேணுமாம். மற்றுப்படி சிறப்பான காரியங்களுக்கு — அது தான், கல்யாண வீடு, சாமத்திய வீடு, கோயில் — இப்படிப் பட்ட இடங்களிலே நடைபெறுகிற காரியங்களுக்குச் சிறகுகள் கீழ் நோக்கி இருக்க வேணுமாம். கதிரவேல் அண்ணர் சொல்லுறது சரியா அப்பு?"

"அவர் சொல்லுறது சரியா இருக்கலாம்"

"நீங்கள் என்ன சொல்லுறீங்கள்?"

"இதைப் பற்றி நான் அவ்வளவு தூரம் யோசிச்சுப் பார்க்க இல்லை. தென்னோலைத் தோரணம் எப்படிப் பின்ன வேண்டும் என்கிறது அவ்வளவு பெரிய பிரச்சனையாய் எனக்குத் தெரிய — இல்லை. ஏன் கதிரவேல் அண்ணரிலே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"அதுக்காக இல்லை அப்பு. வடிவேலுச் சட்டம்பியார் மற்ற விதமாய்ச் சொல்லுறாராம்."



படிப்பகம்

www.padippakam.com

''எப்படி?''

''கலியாண வீட்டுத் தோரணங்களுக்குத் தான் சிறகுகள்மேல் நோக்கி இருக்க வேணும் என்று.''

''அப்படி என்றால், தருமேந்திரக் குருக்களைக் கேட்கிறது!'' ஞானியார் அப்பு இலேசாகப் புன்முறுவல் செய்தபடி தொடருகிறார் ''இவைகளெல்லாம் கால தேச வழமைகள்: மரபுகள். மரபுகள் இடத்துக்கிடம் மாறும், காலத்துக்குக் காலம் மாறும். ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார் இவற்றைக் கைக்கொண்டு கடைப்பிடிக்கிற படியாலே அந்த மரபுகளுக்கு ஒரு பெறுமானம் உண்டு. அந்தக் கூட்டத்துடைய ஒருமையுணர்வுக்கு அந்த மரபுகள் அடையாளங்களாக இருக்கின்றன.''

''ஒருமையுணர்வுக்கு உதவி செய்கிற 'கருவியாயும்' இருக்கின்றன என்று சொல்லலாந் தானே?''

''ஓம் சொல்லலாம். ஆனால், வழமைகளையும் மரபுகளையும் கடும்பிடியாகப் பற்றிக் கொள்ளுகிறவர்களுக்குச் சகிப்புத் தன்மை குறைந்து போகிற ஆபத்தும் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள், தங்கள் கூட்டத்துக்கு வெளியிலே உள்ளவர்களை வெறுப்போடும் ஐயத்தோடும் அணுகுகிற போக்குகளையும் வளர்த்துக் கொள்ளக் கூடும் அங்கே தான் அபாயம் இருக்கிறது.''

''அப்படியானால், இந்த மரபுகளும் வழமைகளும் நம்வாழ்க்கையிலே எந்த விதமான இடத்தைப் பெறுகிறது நல்லது?'' மிகவும் அவதானமாக ஒவ்வொரு சொல்லாக யோசித்து நிதானமாக இந்தக் கேள்வியை முன்வைக்கிறாள், செந்திரு

ஞானியார் அப்பு இரண்டு நொடிகள் ஒன்றும் பேசாமல், தூரத்தில் உள்ள எதையோ பார்த்துக் கொண்டு சும்மா — இருக்கிறார். பிறகு சொல்லுகிறார் .

''அதுக்கு நாங்கள் ஒரு பொதுவான விதியை வகுத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு சம்பிரதாயத்தையும் தனித்தனியே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். கரிக்கட்டியைக் கடித்துப் பல்லு விளக்கிறது நல்லதா அல்லது வேப்பங்குச்சி நல்லதா? இல்லையானால், பற்பொடி நல்லதா, பற்பசை நல்லதா? பற்பசை தான் சிறப்பானது என்றால், எந்தப் பற்பசை? இப்படிப்பட்ட சில கேள்விகளைப் பொறுத்தவரை, நன்மை— தீமைகள் அறநெறி சார்ந்தவை அல்ல. சுகாதாரம், மருத்துவம் போன்ற அறிவுத் துறைகள் வாயிலாக, சில வகையான கேள்விகளுக்கு மறுமொழி காணலாம். ஆனால் வேறு



படிப்பகம்

சில வகையான நடத்தைகளைப் பொறுத்தவரை, அறநெறிக் கோட்பாடுகள் அளவு கோல்களாக அமையும். பொய் பேசுவது சரியா? கொலை, களவு, வஞ்சகம் சூது— இவை நல்லவையா? அன்பு, இரக்கம், அருள், — இவை நலலவையா, கெட்டவையா, என்ற கேள்விகளுக்கு விடை காணுகிற பொழுது, அந்த அளவு கோல்கள் எங்களுக்குத் தேவைப்படும். இந்தக் கோணத்திலே பார்க்கிற பொழுது, மனித நடத்தைகளைச் சில சில படி நிலைகளிலே வகுத்து அமைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

"நீங்கள் சொல்லுறது எக்கு இலேசாக விளங்குது. ஆனால் முழுதும் தெளிவாக இல்லை"

"சில உதாரணங்களை எடுத்துப் பார்ப்பம். காந்தன், சாந்தன் என்று இரண்டு பிள்ளைகள். காந்தனுக்கு மோதகம் விருப்பம்; சாந்தனுக்கு கொழுக்கட்டை விருப்பம். இந்த விருப்பங்களுக்கும் அறநெறிகளுக்கும் அவ்வளவு தொடர்பில்லை. இதை வைத்துக் கொண்டு காந்தன் சிறந்தவனா, சாந்தன் சிறந்தவனா என்று நாங்கள் தீர்மானிக்க முடியாது."

செந்திரு சொல்லுகிறாள் —

"A, B என்று இரண்டு பேர். Aக்குப் பாண் சாப்பிடுகிறதிலே விருப்பம். Bக்கு மனித மாமிசம் சாப்பிடுகிறதிலே விருப்பம். Aயையும் Bயையும் ஒப்பிடுகிற பொழுது, அறநெறி எண்ணங்களை அறவே நீக்கிவிட முடியாது. அதைத்தானே சொல்லுறீங்கள்?"

"ஓம் பிள்ளை. மனித நடத்தைகளிலே சிலவற்றை நல்லவை, தீயவை என்று பிரிக்கலாம். சிலவற்றை அப்படிப் பிரிக்க முடியாது. நல்வினை தீவினை என்று பாகுபடுத்துகிறது ஒரு நிலை; அப்படிப் பாகுபடுத்தாமல், 'வெறு வினை' என்று சும்மா விட்டுவிடுகிறது ஒரு நிலை. அப்படிப் பார்க்கிறபொழுது மிகவும் கீழ்ப்பட்ட படியிலே தீ வினையையும், நடுவிலே வெறுவினையையும், உச்சப்படியிலே நல்வினையையும் வைக்கலாம். கீழ் — நடு — உச்சம் என்ற படிகளுக்கிடையிலே எண்ணுக்கணக்கில்லாத படிகள் பலவற்றையும் நாம் வகுக்கலாம்."

"மிச்சம் நுட்பமான கருத்துகள் — என்னைப் பொறுத்த வரையிலே!"

"போன கிழமை நீ சொன்ன 'சய — பூச்சியம் — சக' என்ற வரிசையைத் தானே, நான் இன்றைக்கு, 'கீழ் — நடு — உச்சம்' என்று சொல்லியிருக்கிறேன்!"

www.padippakam.com

"ஓம் அப்பு. இரண்டும் ஒன்று தான்." செந்திருவின் குரலிலே வியப்பு வெளிப்படுகிறது. அவள் தொடர்கிறாள் — "எங்கள் பண்டைய பண்பாட்டு மரபிலே இரக்கம் அல்லது அருள் மிகவும் சிறந்த விழுமியமாகக் கருதப்பட்டிருக்கிறது என்று போன தடவை சொன்னீங்கள். இன்று பரவலாகப் பேசப்படுகிற 'மனிதநேயம்,' 'மனிதரியம்' என்றவற்றை விட விரிவானது என்றும் சொன்னீங்கள் ......"

"இன்றைய உலகிலே அதிகமாகப் பேசப்படுகிற மற்றொரு விழுமியம் எது? சொல்லு பிள்ளை பார்ப்பம்."

"கடமை"

"இல்லை"

"கண்ணியம்"

"இல்லை"

"கட்டுப்பாடு"

"இல்லை"

"எனக்குத் தெரியாது. நீங்களே சொல்லுங்கள்"

"உனக்கும் தெரியும். இன்னும் ஒரு வாய்ப்புத் தரலாம். தெண்டிச்சுப் பார், பிள்ளை"

"சரி. இந்தா சொல்லுறன். 'விடுதலை' !"

"மெத்தச் சரி. விடுதலை; சுதந்திரம். நான் கிட்டடியிலே ஒரு புத்தகத்தை வாசிச்சுக்கொண்டிருந்தேன்; வருங்காலத்துக்குப் பொருத்தமான மனித விழுமியங்களைப் பற்றி அந்தச் சிந்தனையாளர் எழுதியிருந்தார் "

"விடுதலையைப் பற்றி அவர் என்ன சொல்லுறார்?"

"மனித விழுமியங்கள் எல்லாவற்றுக்குள்ளேயும் விடுதலைதான் முதன்மையானது. ஏனென்றால், ஒவ்வோர் ஆளின் உரித்தோடும், உரிமையோடும் நெருங்கின தொடர்பு கொண்டது விடுதலை. விடுதலை இல்லை என்றால், வேறு விழுமியம் எதுவுமே இருக்க முடியாது. இப்படி அவர் சொல்லுகிறார் இன்றைய உலகிலே மூலை முடுக்குகள் சந்துகள் பொந்துகள் எங்குமிருந்து 'விடுதலை! விடுதலை! விடுதலை!' என்ற கோரிக்கை முழக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது."

"நேற்று நான் பாரதியாருடைய கவிதைத் தொகுதியைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே ஒரு சின்ன நாடகம் வருகுதப்பு — 'விடுதலை' என்று."



படிப்பகம்

www.padippakam.com

செந்திரு தன் கையிலே கொண்டு வந்த ஒரு 'கொப்பி' யைத் திறக்கிறாள். ''அந்த நாடகத்திலே இருந்து சில வரிகளை எழுதி வைச்சிருக்கிறென். கேளுங்கள்.'' செந்திரு வாசிக்கிறாள்.

''— உமக்கு நன்று தோழரே.
— தோழா, உனக்கு நன்று.
— பிரமதேவன் நமக்கோர் பணியிட்டான்
— யாங்ஙனம்?
— மண்ணுலகத்து மானுடன் தன்னைக்
கட்டிய தளை எலாம் சிதறுக என்று.
— வாழ்க தந்தை: மானுடர் வாழ்க.
— தந்தை வாழ்க, தனிமுதல் வாழ்க
உண்மை வாழ்க, உலகம் ஓங்குக.
தீது கெடுக, திறமை வளர்க.''

''உண்மையிலேயே நீ கெட்டிக்காரி தான். பிள்ளை தேரிஞ்செடுத்துக் கொப்பி பண்ணி வைச்சிருக்கிற வரிகள் எனக்கும் நல்லாய்ப் பிடிச்சுக் கொண்டுது. 'விடுதலை' என்ற விழுமியத்திலே பாரதியார் வைச்சிருந்த பற்றையும் விருப்பத்தையும் நீ சரியாய்த் தான் இனங்கண்டிருக்கிறாய். இங்கே தந்தை, தனிமுதல் என்ற சொல்லுகள் கடவுளைக் குறிக்கின்றன. ஆனால், அண்மைக் காலத்து ஐரோப்பிய சிந்தனையாளர்களை எடுத்துப் பார்த்தால், அவர்கள் 'விடுதலை' என்ற எண்ணக் கருவோடே கடவுட் கொள்கையை அதிகம் கலக்க - இல்லை.''

''அப்படி என்றால், நீங்கள் சொல்லுற சிந்தனையாளர்கள் விடுதலையை வேறு என்னென்ன கருத்துகளோடே சேர்த்துப் பார்க்கிறார்கள்?'' செந்திரு கேட்கிறாள்.

''விடுதலை, சமத்துவம், நீதி என்றும், மனித உரிமை என்றும், ஏற்றத் தாழ்வுகள் நீங்கி எல்லாரும் ஒருமையுணர்வோடு பொது நல நோக்கோடு வாழ வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் தத்தமக்குரிய திறமைகளை நன்கு வளர்த்து மேம்பாடடைய வேண்டும் என்றும் — இப்படியான சிந்தனையோட்டங்களை நாங்கள் நவீன உலகத்திலே மிச்சம் பரந்து பட்ட அளவிலே நானும் சுருக்கமாய்ச் சொல்லுகிறேனென்றால், [illegible] வாழ்நிலையையும் சலுகைகளாக அல்லாமல், [illegible] கோருகிற ஓர் அணுகுமுறை மலர்ச்சி பெற்றிருக்கிறது. இவையெல்லாம் திடீரென்று எங்கிருந்தோ வானத்திலிருந்து குதித்த கோரிக்கைகள் அல்ல. 'மானுடன் தன்னைக் கட்டிய தளை எலாம் சிதறுக' என்ற இலட்சியம் — 'குன்றலிலாது உயிர்



படிப்பகம்

www.padippakam.com

கள் வாழ்க' என்ற விருப்பம், நாட்டம், எப்போதும் மனிதர்களி டையே உள்ளது தான். மனித விடுதலையை மட்டுப்படுத்துகிற தடைகள் உடைகிறது நல்லது என்று தான் எல்லாரும் எல்லாக் காலங்களிலும் சிந்தித்திருக்கிறார்கள். ஆனால், இதை எப்படிச் சாதிக்கிறது என்றதிலே தான் பெருந் தடுமாற்றங்கள் இருந்து வந்திருக்கின்றன. 'சமவாய்ப்பு' என்றது மனிதனுடைய அடிப்ப டைப் பிறப்புரிமை என்ற எண்ணம் வலுப்பட்டு வந்தது ஒரு நல்ல வரலாற்று வளர்ச்சி என்று தான் நான் நினைக்கிறென்.''

செந்திரு கேட்கிறாள்— '' 'சமவாய்ப்பு' என்ற விழுமியம் ஐரோப்பியரிடமிருந்து நாங்கள் பெற்றுக் கொண்டது என்றா சொல்லுறீங்கள்?''

''இல்லை, இல்லை. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவரும் சொல்லியிருக்கிறார் தான். ஆனாலும்...''

''ஆனாலும்?''

''பிறப்பிலே எல்லா உயிர்களும் சமமானவை என்று சொல்லி விட்ட வல்லுவர் உடனே, மிகவும் அவசரம் அவசரமாக, அடுத்த வரியிலேயே, 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்' என்று வேற்றுமைகளை அழுத்திக் காட்டுகிறார்.''

''அது சரி தானே அப்பு!''

''எது சரி? வேற்றுமைகளை அழுத்திக் காட்டினதா?''

''ஏன், ஒருவருடைய செயல்களை வைச்சுத் தானே அவரு டைய குணங்குறைகளை நாங்கள் மதிப்பிடவேணும்?''

''அது சரி. கொஞ்ச நேரத்துக்கு முந்தி, நாங்கள் பார்த்தம்— நடத்தைகளை— அதாவது செயல்களை— 'கீழ்— நடு— உச்சம்' என்று படுநிலைப்படுத்தலாம் என்று. செயல்களைக் கொண்டு தான் உயர்வு தாழ்வை நிச்சயிக்க வேணும். ஆனால், பிழை எங்கே வருகிறது? ஒருவனை நாங்கள் பிடித்து அவசர அவசரமாக அவனை மதிப்பீடு செய்து (அல்லது செய்யாமலே) தீர்ப்புக் கொ டுத்து 'இவன் சான்றோன்; இவன் கயவன்' என்றெல்லாம் முடிவு கட்டி, முத்திரை குத்தி வைத்து விடுகிறம். அவன் மாத்திரம் அல் லாது அவனுடைய மனைவி, குழந்தை, பேரப்பிள்ளை, பீட்டப் பிள்ளை, சொந்தக்காரர்கள் எல்லாரும் குறைவானவர்கள். அல்லது கூடினவர்கள் என்று பிரிச்சு, வகைப்படுத்தி ஒதுக்கித் தனித்தனியான கூடுகளுக்குள்ளே அடைச்சு வைக்கப் பார்க்கிறம். வேற்றுமைகளை அழுத்தி வலியுறுத்துகிறதிலே அவ்வளவு ஆர்வம்! எங்களுக்கு!''

''எங்களுக்கு என்றால், ஆருக்கு அப்பு?''



படிப்பகம்

www.padippakam.com

''எங்களுக்கு என்றால் வேறே ஆருக்கு? எனக்கு, உனக்கு, அவருக்கு, இவருக்கு, இந்த ஊராருக்கு, இந்த நாட்டாருக்கு — எல்லாருக்கும் தான் இப்போது உள்ள மனிசருக்கு மாத்திரம் அல்ல, இவர்களுடைய முந்தையோருக்குங் கூட, வேற்றுமைகளை அழுத்தி வலியுறுத்துகிறதிலே தான் ஆர்வம். அந்த ஆர்வத் தீவிரத்துக்கு அஞ்சித்தானோ என்னவோ, உயிர்களுடைய ஒப்புமையைப் பற்றிப் பேச வந்த வள்ளுவர் கூட, அதைப்பற்றி அதிகம் விவரமாய் ஆராயாமல், உடனடியாக வேற்றுமைகளுடைய அளவுகோல்களைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார். அதனாலே தான் நான் நினைக்கிறேன், தமிழ் மரபிலே, இந்தியப் பண்பாட்டு மரபிலே, கீழைத் தேய மரபுகளிலே, சமத்துவம் பற்றிய எண்ணங்கள் இலேசாக இழையோடியிருந்தாலும் அவை முழுமையான மலர்ச்சியைப் பெறவில்லை. வாய்ப்புகளை எல்லாருக்கும் கொடுத்து அவர்களுடைய நிறை வளர்ச்சியைக் காணுகிறதுக்குப் பதிலாய், வாய்ப்புகளை எப்படிப் பிடுங்கி எடுக்கிறது என்றதிலே தான் எங்களுடைய அக்கறைகள் அதிகமாய் இருந்திருக்கின்றன. ஒருவனை எப்படி அடக்கலாம், முடக்கலாம், ஒடுக்கலாம், ஒடிக்கலாம் என்று திட்டமிட்டு அதை முழுவேலையாய்க் கொண்டு நடத்துகிறதிலே நம்முடைய மக்களிலே ஒரு சாரார் இடைவிடாமல் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். சாதி குலம், பிறப்பு, தொழில்— இவற்றின் அடிப்படையிலே பேதங்களையும் பிளவுகளையும் உண்டாக்கியுள்ளார்கள். ஆசாரம், சீலம், தரும எல்லாவற்றையும் கூட இந்த வேற்றுமைகளை விரிவாக்கி நிலைப்படுத்துகிற வகையிலே தான் வகுத்துப் பேசிப் போதனை செய்து வந்திருக்கிறார்கள். ஆண் பெண் என்ற பேதத்தின் அடியாகவும் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்பட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. இந்த அறியாமைச் சேற்றுக்கிடையிலே 'சமவாய்ப்பு', 'சமூக நீதி' பற்றிய எண்ணங்கள் தலையெடுக்க இயலவில்லை.''

''அப்படியானால், ஐரோப்பியர்கள் தான் எங்களுக்கு ஒளியைக்காட்டித் தந்தார்கள் என்றா சொல்லுறீங்கள்?''

ஞானியார் சொல்லுகிறார்—

''ஒரேயடியாய் அப்படி அடித்துச் சொல்லிவிட முடியாது. ஆனால், சில துறைகளிலே எங்களுடைய பலவீனங்களை நாங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். வீணாய் வெட்கப்படுகிறதிலே கருத்தில்லை— நவீன விஞ்ஞான எழுச்சி கண்டது ஐரோப்பாவிலே தான். அந்த எழுச்சிப் பேரலை ஒரு நாலு நூற்றாண்டுக்குக் குறைவான வரலாற்றைத்தான் கொண்டது. அரசியலும் உலகியலிலும் இடம்பெற்றமுக்கியமான புரட்சிகள் பல ஐரோப்பாவிலே தான் நடந்தேறி உள்ளன. பிரெஞ்சுப் புரட்சி என்றால் என்ன, எந்திரத் தொழிற் புரட்சி என்றால் என்ன, பொதுவுடைமை புரட்சி



படிப்பகம்

www.padippakam.com

ஒள் என்றால் என்ன. ஐரோப்பாவிலே தோன்றிய விஞ்ஞான விழிப்போடு கைகோத்தபடி தான் நடந்தேறி இருக்கின்றன. இந்த அறிவுப் புரட்சிகளையும், அரசியல், பண்பாடடுப் புரட்சகிளையும் முதன் முதலிலே காணுகிற பேறு பெற்றது ஐரோப்பாதான் என்று சொல்லுகிறதிலே அதிகம் பிழை இருக்க முடியாது.

செந்திரு இடை மறிக்கிறாள்—'' வரலாறு எங்களை வஞ்சித்துவிட்டது; ஏன் இந்தப் பாகுபாடு? ஒர வஞ்சனை? ஐரோப்பாவுக்கு அத்தனை சலுகையா? இப்படி நடந்தற்கு என்ன காரணம் அப்பு?''

அப்பு சிரிக்கிறார். ''நேற்று நெல்லியடியிலே மழை பெய்தது நீராவியடியிலே கடும்வெயில். ஏன் இப்படி நடந்தது?''

''இயற்கை நிகழ்ச்சிகளையும் சமூக நிகழ்வுகளையும் ஒப்பிட முடியுமா. அப்பு?''

''முற்று முழுதாக ஒப்பிட முடியாது தான். ஒப்புக்கொள்ளுகிறேன்.''

''சமவாய்ப்புப் பற்றி எண்ணங்கள் ஐரோப்பாவிலே வலிமை பெற்றதுக்கான காரணங்கள் என்னென்ன?''

''புறவுலகத்து வாழ்நிலைமைகள் மனிதர்களுடைய அகவுலகிலே எத்தனையெத்தனையோ எண்ணங்களைப் பிறப்பிக்கிலறன. எண்ணங்கள் செயலாய் மாறுவதுண்டு. செயல்களாலும் நிகழ்வுகளாலும் முன்னைய எண்ணங்கள் மாற்றமடைகிறதுண்டு. புதிய எண்ணங்கள் தோன்றுகிறதுண்டு. நிகழ்வு—எண்ணம்— செயல்— நிகழ்வு— எண்ணம்— செயல்— நிகழ்வு— எண்ணம் — செயல்...... என்று இப்படியே ஒரு சங்கிலித் தொடராக இடையறாத ஓட்டமாகப் போய்க்கொண்டுடிருக்கிறது தான் வரலாறு. இந்தசங்கிலித் தொடரிலே எங்கேயாவது நிகழுகிற திசை திருப்பங்கள் ஒன்றுக்கொன்று உடவியாகி ஒருங்கே சேருகிற பொழுது பெரிய மாற்றங்களும் நடக்கிறதுண்டு. மற்றும்படி வரலாறு வேண்டுமென்றே யாருக்கும் வஞ்சகமாக நடக்கிறதில்லை.''

''சமவாய்ப்பு, சமூகநீதி என்பவற்றோடே மிச்சம் நெருக்கமான தொடர்புள்ள விழுமியம் தான் 'விடுதலை' என்று நீங்கள் விளங்கப்படுத்தியிருக்கிறீங்கள். இந்த விளக்கம் எனக்கு மிச்சம் பிடிச்சுக் கொண்டுது. எங்களுடைய இப்போதைய சூழ்நிலையிலே விடுதலையைப் பற்றி நல்லாய் விளங்கிக் கொள்ளுறதும் முக்கியம் தானே!'' செந்திரு திண்ணையிலிருந்து மெல்ல எழும்புகிறாள்.

''சரி பிள்ளை. பொழுதும் நல்லாய் இருட்டிப் போட்டுது. கவனமாய்ப் போய் வா.''

''ஓம், அப்பு.''

★



படிப்பகம்

www.padippakam.com

# வீடுபேறு....?

என். சண்முகலிங்கன்

அப்பாவின் அழுகை விக்கல் இன்னமும் ஓயவில்லை.

ஆறுதல் படுத்தலாம் என நினைத்தாலும், அது அழுகையை மீண்டும் வெடிக்கச் செய்யலாம் என்ற அச்சம். காதுகளைப் பொத்திக் கொண்டு படுத்துப் பார்க்கிறேன். இப்பொழுது காலையிலிருந்து நடந்த சம்பவங்கள், சத்தங்கள் எல்லாம் உள்ளே ஓங்கி ஒலிக்கின்ற உணர்வு — ஒலி; ஒளி; உறக்கம் இல்லாத மனத்திரை விரிவு. அப்பாவின் விக்கல் ஒலியிலிருந்து தப்பிக் கொள்ள என்ன செய்யலாம்? இப்படியான என் உணர்வு அழுத்தங்களிடையே எனக்கு கைகொடுப்பன கவிதை. கதை...

இன்றைய அழுத்தங்கள் கவிதைக்குள் அடங்காதன. கதையாகவே எழுதும் முடிவு மேலெழுகிறது. நல்ல வேளையாக மேசையில் அரிக்கன் லாம்பு அனுங்கிக் கொண்டிருந்தது. புதிய வீட்டில் இரவிரவாக 'லைற்' போட்டு பகினம் காட்டாமல் இருக்கவென்று முன்னேற்பாடாய் கொழுத்தி வைத்தது கைகொடுக்கிறது. இல்லையென்றால் நான் 'லைற்' போட கள்ள நித்திரை கொள்ளும் எல்லோரும் எழுந்து விடுவார்கள்.

வழமையாக கதையை எழுதிவிட்டே தலைப்பை இடும் நான், இன்று தலைப்பை இட்டு எழுதத் தொடங்குகின்றேன்.

கருவிலேயே உயிர்த்த தலைப்பு; வீடுபேறு....?

எத்தனை தலைமுறைகளைக் கண்ட எங்கள் ஊரே வெறிச்சோடத் தொடங்கியது. திருமண உறவில் கூட வெளியே செல்ல விரும்பாத ஊர்ப்பிடிப்பு தளர்கிறது. இரண்டு கிழமையாக தொடர்ந்து விழும் ஷெல் தாக்குதல் ஊரையே கலக்கிவிட்டது.

பாதுகாப்பு வலயத் தொடு கோட்டில் இருந்தது எங்கள் வீடு.

அவ்வளவு பயமில்லை என இருந்த இருப்பிலும் இடிவிழுந்தது. சென்ற வாரம் உள்ளே



படிப்பகம்

www.padippakam.com

நுழைந்து, அட்டகாசம் செய்து சென்ற சம்பவத்தின் பின் தான் ஊர் வெறிக்கும் இந்த நிலைமை.

பக்கத்து வீட்டிலும் கட்டில் கழற்றுகின்ற சத்தம். ''அண்ணை ஆசையம்மாவையும் போகப் போயினம்'' தங்கைச்சியின் கண்டுபிடிப்பு. அப்ப, நாங்கள் ... என்கின்ற மாதிரி பார்க்கிறாள் அவள். ''அப்பா என்னவாம் ...'' ''எங்களை எங்கையேன் போகட்டாம், தான் வீட்டை விட்டிட்டு வரமாட்டாராம்.'' எப்படித் தனியப் போறது? எழுந்து எனது அறைக்குள் 'ஒழித்துக்' கொள்ளுகின்றேன். 'ரேப் ரெக்கோடரை' அழுத்துகின்றேன்.

''தென்தெனனோ ... தென தெனனோ ...''

எங்கள் வீரபத்திரர் வசந்தன் ஒலிப்பதிவு நாடா இதற்கு முன் புரியாத அழகும் செழுமையும் துலங்கும் உணர்விடை, எங்கள் ஊரைப் பாடும் அந்த வசந்தனில் என்னை மறக்க முயலுவேன் ... பக்கத்து வீட்டு சாமான்களுடன் அவர்கள் 'லொறி' உறுமி மறையும் சத்தம். அந்த ஒலியின் மறைவில் ஒரு பயங்கரச் சத்தம். குண்டுகள். தொடர்ந்து வெடிக்கும் குண்டுகள். ஊரில் மிஞ்சிய அயல் குழந்தைகள் பெண்கள் ஒலங்கள்,

''ஆமி வருகுதாம் ...''

ஓட்டம்; ஒழிதல் ...

''காக்க காக்க கனகவேல் காக்க தாக்க தாக்க தடையறத் தாக்க'' அம்மாவின் குரலில் அச்சம் மறைக்கும் கந்த சஷ்டி கவசம்.

எந்தப் பக்கம் கூடச் சத்தம்? இந்த அவலத்திடையும் நானும் தங்கைச்சியும் புள்ளிவிபரக் கணக்கெடுப்பு.

''நாங்களும் எங்கையேன் போவம் தம்பி ...''

''அப்பாவாலை ஓடேலுமே ...''

''அப்ப நீ ஆவது ஓடித் தப்பு ...'' அம்மாவும் நானும்.

அப்பா மட்டும் கட்டிலாலும் எழுந்திருக்கவில்லை, அவர் முகத்தில் எங்களது போல பயத்தின் சுவடுகள் இல்லை; ஆனால் கவலையின் சிந்தனை.

தாக்குதல்; எதிர்த் தாக்குதல் — கவச வாகனங்கள் பொடிபட, அவர்கள் ஓடியிருக்க வேண்டும். மீண்டும் அமைதி. ஒழுங்கையில் மனித குரல்கள் சில ...

'புளியடி வயிரவர் கோயிலடியிலை, குழந்தையோட நிண்ட அந்த இளந்தாரிப் பெடியனை கூப்பிட்டிட்டு சுட்டுப் போட்டாங்களாம்!

'கிளியன்ரை மனிசி கும்பிடக் கும்பிட வீட்டுக்குள்ளை உள்ளிட்டு சுட்டிருக்கிறாங்கள்.'





படிப்பகம்

www.padippakam.com

''மாலடியிலை தானாம் பொடியளின்ர கண்ணி. அந்த வயிறன் கிளாக்கர் வயரை அறுத்துப் போட்டானாம். இல்லையெண்டால் ஆமியை அதிலையே திருப்பியிருப்பாங்கள் ...''

''நாங்கள் வீட்டுக்குள் கிடந்தது எவ்வளவு பேய்த்தனம்'' நானும் தங்கைச்சியும் எங்களுக்குள் ... வந்த மற்றைய செய்தி எங்கள் யோசனையையும் அர்த்தமிழக்கச் செய்யும். ''கோட்டங்களுக்காலை ஓடின சனங்களிலையும் மூண்டுபேர் சாக்களாவத்தையடியிலை மேளையிருந்து சுட்டு சரியாம்...'' 'எங்கேயும் அப்பாக்கு நிகழ்ந்தவ ஒன்றுகாணோ' மீண்டும் நானும் தங்கச்சியும் தான்.

'சூரபத்மாலைத் துணித்த சையகனார் சின்னக் குழந்தை சேவடி போற்றி' சாமி அறையிலிருந்து அம்மாதான்; முன்னைய அச்சம், அவலம் தணிந்து நன்றி கனியும் குரலில்.

அப்பாவைப் பார்த்தேன்; அவரின் பார்வையும் வெறுமைக்குத் திரும்பியிருந்தது. கட்டிலில் போய் இருந்து, 'என்னப்பா, பயந்திட்டியளே ...' என்று கேட்டேன். 'சாய் ...' என்று தலையாட்டலுடன் பதில். பிறகு மௌனம்.

அப்பாவின் இந்த மௌனத்தின் பொருள் எனக்குப் புரியும். பேச்சுக் கொடுத்தால், காலையில் நடந்த குண்டுச் சம்பவங்களையும் சொல்லி, வீட்டைவிட்டு வெளிக்கிடும் கதைக்கு நான் மீண்டும் சென்றுவிடலாம் என்பதனாலான கள்ளத் தப்புதலே, இந்த மௌனம்.

கடந்த இரண்டு கிழமை அனுபவத்தில், பிரச்சனை குறையுமட்டும் இந்த ஆபத்து வலயத்திலிருந்து கொஞ்சம் தள்ளி சில நாள் இருந்து வருவோம் என்பதில், அப்பாவை இணங்க வைக்க பட்டபாடுபட்டு, தோல்வியில் நான் கண்டுபிடித்தது இந்த மௌனார்த்தம்.

அப்பாவின் கையைப் பிடித்தபடி இந்த மௌனத்தை குலைக்கும் முயற்சியின் கணங்களிடை. பக்கத்து வீட்டு சின்னத்தங்கள் ஆச்சியின் ஒப்பாரி ஒங்குகிறது. ''அண்ணை, ஆச்சியை விட்டிட்டு சாமான்களைத் தான் கொண்டு போயிருக்கிறாங்கள் ...'' 'ஒருவேளை அடுத்த 'றிப்பில்' சான்ஸ் கிடைக்கலாம், அப்படி ஏதும் 'சான்ஸ்' இல்லையென்பதுமாதிரி அவவின் ஒப்பாரிப் பாடல் அடிகள்.

அப்பாவுக்கும் விடயம் விளங்காமல் இல்லை; இருந்தாலும் விடயத்தை திசை திருப்பும் நிலையில் 'ஏதும் புத்தகம் தா வாசிக்க ..' என்கின்றார்.

'நடந்த அழுத்தல்கள் போதாதென்று நானும் சத்தம் போடக் கூடாது' என்ற தீர்மா



படிப்பகம்

www.padippakam.com

குள் துளாவி ஒன்றை எடுக்கின்றேன். இந்திரா பார்த்த சாரதியின் 'சுதந்திர பூமி' அப்பா சுதந்திர பூமியில் மெள்ள நுழைகிறார் ...

நடந்த சம்பவங்களை மறந்து அல்லது மறக்க முயன்று அவரவர் தத்தம் கடமைகளுக்குள் நுழைய முயலுகின்றோம். காலையில் குடித்த கேனீருக்குப் பிறகு ஒன்றுமில்லை; அடுப்படிக்குச் செல்கிறார் அம்மா. தங்கைச்சி ஏதோ மூலிகையை தேடிக்கொண்டிருந்தாள். ஆயுள்வேதம், வருகிற கிழமை சோதனை அவளுக்கு.

''அண்ணை ... இங்கை பார் 'ஷெல்' துண்டு ...'' மூலிகைக்குப் பதில் 'ஷெல்' துண்டுகளுடன் ஓடிவந்தாள் ...

''இது எங்களிலை பட்டிருந்தால் ...''

''சரி, அம்மாவக்கு காட்டாமல் பத்திரமாய் அதை கொண்டுபோய் வை.'' வரலாற்று ஆதாரங்களைப் பேணும் முயற்சியும் இந்த அவலத்திடை. நானும் எனது புத்தகம், நோட்டினுள் மெள்ள நுழைய முயன்றேன்.

'இனப்பிரச்சனையின் தாக்கங்கள் ...'

எங்கள் அனுபவத்தையும் மிஞ்சி ஒரு படிப்பா ... வீட்டை விட்டு கிளம்புவதில் அப்பா காட்டும் தயக்கம், எங்கள் வீட்டில், ஊரில் அவர் கொண்ட பிணைப்பு ... 'அப்பாவின் இந்த வீட்டுப்பற்று உணர்த்தும் அர்த்தங்கள் ஆழமானவைதான் ...'

திடீரென, 'சடசடசட' என சுடும் ஒலி, என் சிந்தனையை நிறுத்தும். ''ஓடிவாங்கோ அப்பா ...'' அப்பாவைப் பிடித்துவந்து குசினி புகைக்கூண்டின் கீழ் தள்ளி ... நாங்களும் உள்ளே அவிகின்றோம். இன்று வான் வெளித்தாக்குதல் அனுபவம். ஒட்டைத் துளைத்து எங்கள் குசினிக்குள்ளும் ஒன்றிரண்டு குண்டுத்துண்டுகள், அந்த ராட்சத ஹெலியின் அக்கிரமம் முடிய அரைமணித்தியாலம் வரையில் பிடிக்கிறது.

புகைக்கூண்டின் கீழ் 'கனன்ற' பொழுதிடை எப்படியும் வீட்டை விட்டு நாமுங் கிளம்ப வேண்டும் என்ற முடிவு மேலும் உறுதி பெறுகின்றது.

'அப்பாவைத்தான் எப்படிச் சமாதானப் படுத்துவது ... சம்மதிக்க வைப்பது ...' இந்த நோக்கில்தான் நம் தமிழ்ச் சினிமா அற்புதமாய் திடீரென 'கேற்றை' திறந்தபடி அக்கா வருகின்றாள். சொல்லாமல் கொள்ளாமல், அதுவும் இந்த ஆபத்து வேளையில் நீள தடைகளைத் தாண்டி ... எங்கள் ஆச்சரியத்தை விடுவித்து அவளே எத்துடன் புத்தக அலுமாரிக்

www.padippakam.com

பேசினாள் ... "ஊர்ப் பக்கம் பிரச்சனை மோசம் எண்டு கேள் விப்பட்டன். அங்கை நிம்மதியாய் வேலை செய்ய முடியவில்லை. லீவை போட்டிட்டு வந்திட்டன்."

"இந்த சூடுகளுக்காலை எப்பிடிப் பிள்ளை வாறாய் "

அப்பாதான் கேட்டது. "சந்தியிலை வந்து இறங்கினால் பஸ் இல்லை; நடந்துதான் வந் தன். வரயுக்கைதான் ஹெலிச் சூடு ... வெள்ள வாய்க்காலுக் குள்ளை கிடந்ததுதான். ஹெலி போக எழும்பி வாறன் ..."

"விசர்ப்பிள்ளை, இந்தப் பிரச்சனையுக்கை வந்திருக்கி றாய்" வழமை போல் பிள் ளைக்கு புத்தி சொல்லும் அப்பா "சரி சரி உடுப்பை மாத்து பிள்ளை... தேத்தண்ணி..." அப் பாவின் இயல்பான உபசரிப்பு.

"தேத்தண்ணிக்கு இப்ப அவ சரம் இல்லை ... நாங்கள் இப்ப வெளிக்கிடுறம் ..." எனக்கு விட யம் விளங்கிவிட்டது. அப்பா வுக்கும் விளங்காமல் இல்லை. 'எங்கை' என்ற மாதிரிப் பார்க்கி றார் அப்பா. "ஓம் அப்பா, கொஞ்ச நாளைக்கு நீங்கள் இங்கை இருக்க ஏலாது. இப்பிடி அங்கையும் இங்கையும் ஓடவும் பதுங்கவும் உங்களுக்கும் ஏலாது" அது ஏலும் என்கின்ற மாதிரி ஒரு பார்வை; அப்பா தான்.

"தம்பி தானே பாவம் அப்பா ... அவன் வேலைக்கும் போக ஏலாமல் ..."

"அவனைத்தானே அங்கினை பேர்ய் இருக்கச் சொன்னனான்"

"உங்களை விட்டிட்டு அவன் எப்பிடி அங்கை போய் இருக்கி றது. நானே இவ்வளவு தூரத் திலையிருந்து இருக்கேலாமல் வந்திருக்கிறன் ..."

மெள்ள மெள்ள இடை வினை நடக்கிறது. அக்காவின் அன்பு, ஏற்கனவே என்னால் இளகவைக்கப்பட்ட அப்பாவின் மனதை மேலும் கனியச் செய் திருக்க வேண்டும். தம்பிக்காக தற்காலிகமாக விட்டை விட்டுக் கிளம்பும் முடிவு ஒரு மனதாக நிறைவேறுகின்றது. திருநெல் வேலியில் வீடு பார்த்தல்; வான் பிடித்தல்; சாமான் ஏற்றுதல் எல்லாம் பாதிப் பொழுதில் அவசரமவசரமாக நடந்தது.

அப்பர்வுக்குத் தந்த வாக்கு றுதியின்படி மிகவும் அடிப்படை யான சாமான்களை மட்டும் கொண்டு செல்வது என்பதால் இந்த ஏற்றுமதி இறக்குமதி சிரமமாயமையவில்லை.

பிரியாவிடை சீன் ... வீட் டோடை கிளம்பும் போது 'பப்பிக்கு' விடயம் புரிந்திருக்க வேண்டும். உச்ச ஸ்தாயியில் குரைத்து அழுகின்றது. "தம்பி இதையும் கொண்டு போவமே...', அம்மாவின் ஆலோசனை. எனக்குக் கூட மனதை நெருடி னாலும், இப்ப இந்த சாமா னுகளோடை கஷ்டம் அம்மா. பிறகு வந்து பாப்பம் ..."

www.padippakam.com

ஒழுங்கை நெளிவுகள் தாண்டி வீதியில் மிதந்த போது, ''என்ணண்ணை நீங்களும் போறியளே..'' சென்றிக்கு நின்ற அந்தப் பையன்தான் கேட்டது. மக்கள் இல்லாத சுடலைக்கா இந்தக் காவல் என்றமாதிரி அவன் பார்வை.

''நிலைமையைப் பார்த்து ரண்டொரு கிழமையிலை வந்திடுவம், தம்பி'' இதற்குமேல் சொல்ல ஒன்றும் தெரியவில்லை. உயிருக்காக ஓடும் அவலம், வெட்கமாகவும் இருந்தது. அப்பாவின் மனதின் உயர்வு விஸ்வரூப தரிசனமாகிறது...

இந்த தரிசனத்தை குலைப்பதாய் அப்பாவின் 'ஓ...' வென்ற அழுகுரல் எழுகிறது. கூடவே அம்மா, அக்கா, தங்கைச்சி மூவரும் இணைந்து கொள்கின்றனர். எனக்குச் சத்தம் வரயில்லை. கண்ணீர் தாராளமாக வந்தது. பெரியையா வீட்டை, வான் தாண்டும் வரை கூப்பிய அப்பாவின் கரம்... இன்னும் நெஞ்சில் உதிரம் கொட்டும். அப்பாவை மட்டுமல்ல; என்னை, தங்கைச்சியை வளர்த்த வீடு அது. எங்கள் வீடுகூட பின்னாலே அப்பா உழைப்பில் எழுந்தது. பெரியையாவின் வீடு எங்கள் பரம்பரை வீடு. எங்களை தாலாட்டிய வளைகளை தாங்கிய வீடு அது... எங்கள் வீட்டை விட்டு புறப்படும்போது கூட வெடிக்காத அந்த அழுகை, பெரியையா வீடு தாண்டும் போது அப்பாவுக்கு ஏற்பட்டதன் அர்த்தம் புரிகிறது.

''அழாதையுங்கோ அப்பா'' அழுதபடி எல்லோரும் ஆறுதல் சொல்லும் முயற்சியின் மௌன ஊர்வலமாய் எங்கள் பயணம். உத்தியோகபூர்வ புள்ளிவிபரப்படி இந்த நாட்டில் 22 அகதிகள் தான் என சென்ற வாரத்தில் படித்த அந்த ஆய்வறிக்கை முடிவுகள் ஒரு கணம் நினைவில் நகைத்துப் போகும். கடந்த ஒரு மணித்தியாலத்துக்கு முன் இருந்த கௌரவம் போக, அகதியான அவலம் வருத்தும்.

என்னுடைய வருத்தத்தை வெளியில் காட்டி நிலைமையை மோசமாக்காமல் யந்திரமாய் இருக்க முயலுவேன்... புதிய அந்த வாடகை வீட்டில் குடியேற்ற வைபவம் இத்தனை அவலத்திடையும் பால் காய்ச்சி குடிபுகும் பண்பாட்டுச் சடங்கும் நடக்கும். இந்தப் பால்தான் இரவுச் சாப்பாடு. இதனைக்கூட குடிக்க மறுத்த அப்பா... ஒரு மாதிரி எங்களுக்காக சாஸ்திரம் படிக்கு ஒரு மிடறு குடித்தது தான்... அதனை விழுங்கவும் அழுகை விக்கல் விடவில்லை. வேளைக்கே படுக்கைக்குச் சென்றுவிட்டோம்...

நான் எழுதும் கதை முடியவில்லை. அதற்குள் அப்பாவின் ஓயாத விக்கலில் திடீரென ஒரு ஓங்குதல் — துடித்துப் பதைத்து விளக்கைத் தூண்டி, அப்பாவின் கட்டிலை நான் சேர்வதற்குள் அம்மாவின் மடியில் திடீரென அந்த விக்கலும் ஓயும்... அப்... பா! O



படிப்பகம்

www.padippakam.com

# காதினிலே விழும் கீதம்

✿ சேயோன்

— ஊருக்குப் பெரியவர்
நானே தானே
உலகத்தில் பெயர் பெற்ற சீமான் நானே
ஆருக்கும் பயமில்லா அய்யா சாமி
அமைதியின் பேர் சொல்லி வாழ்வேன் நானே.

— தீர்வுக்கு வழி சொல்லும்,
அய்யா சாமீ!
சிரிப்புக்குக் கருத்தென்ன?
சொல்வீர் சாமி.

— யாருக்கும் வாழ்விடம்
வேண்டும் தானே!
இடருக்கும் வறுமைக்கும் தடைபோட வேணும்.

— போர் நிற்க ஏதேனும்
செய்யுங்கள், அய்யா;
புகழ் பெற்று வாழலாம் லங்கா தீவில்

— அமைதிதான் நல்லதாம்.
அன்பே தெய்வம்
ஆனந்தமாய் மக்கள் சாகட்டும், அப்பா.
அமைதி தான் எங்களின் நோக்கமும் ஆகும்.
அஞ்சாதீர், அஞ்சாதீர்; எல்லாம் நன்மை.

— சண்டையை எப்போது
நிற்பாட்டுவீர்கள்?

— சகலர்க்கும் இசைவான
தீர்வு நாம் காண்போம்.



படிப்பகம்

www.padippakam.com

— என்றைக்குத் தான் எங்கள்
இன்னல்கள் ஓயும்?
ஏக்கங்கள், தேக்கங்கள் தேய்ந்து போய் ஆகும்?

— இன்றைக்கு நான் ஒன்றும்
சொல்லேன், சொல்லேன்
ஏற்றதோர் சூழ்நிலை தோன்றும் தானே!
அன்றைக்குச் சண்டையை நிற்ப்பாட்டி வைப்பேன்.
அது மட்டும் பேசாமல் வாய் மூடும், அம்மா.

— என்றைக்குத் தான் எங்கள்
துன்பம் மாயும்?
ஏற்றதோர் சூழ்நிலை எப்போ தோன்றும்?

— ஒன்றுக்கும் அஞ்சாதீர்;
வெல்வோம் நாமே.

ஊருக்குப் பெரியவர் நானே தானே
ஊருக்குப் பெரியவர் நானே தானே
உலகெங்கும் பெயர் பெற்ற சீமான் நானே.
ஆருக்கும் பயமில்லா அய்யா சாமி.
அமைதிக்குப் புகழ்பாடும் அப்பா சாமி;
சமருக்குக் காலான சாண்டோ நானே
அமைதிக்கும் தூணான அப்பன் நானே
ஊருக்குப் பெரியவர் நானே தானே
உலகெங்கும் பெயர் பெற்றசீமான் நானே. ★

| | |
|---|---|
| மகள்: | அப்பா புலமைப் பரிசில் விண்ணப்பத்திலை எவ்வளவு வருமானம் எண்டு போடுறது?'' |
| விவசாயி: | இப்ப கஸ்டம்தானேபிள்ளை ஆயிரமெண்டுபோடன் |
| மகள்: | இதென்னப்பா பெரிய முதலாளிமாற்றை பிள்ளையளெல்லாம் நாநூறு ஐநூறுஎண்டுதான் போடுதுகள். |
| விவசாயி: | சீ ... படிக்கிற இடத்திலையும் பொய்சொல்லுறதே |
| மூத்த மகள்: | அப்பாவுக்கு ஒண்டும் விளங்காது பேசறிக்கு விண்ணப்பிக்காததாலை இவற்றை சொல்லைக் கேட்டு இப்ப காசு குறைய எடுக்க வேண்டிக்கிடக்கு. |
| விவசாயி: | ......? |



படிப்பகம்

www.padippakam.com

# மலையகமும் இலக்கிய வளர்ச்சியும்

அருவி அன்பன்

ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பை விரிவுற நோக்கின் அதனிடையே பல்வேறு பிரதேச இலக்கியக் கூறுகள் செழுமையுடன் உள்ளடங்கி நிற்பதினை அவதானிக்க முடியும். அவற்றில் மலையகத் தமிழ் இலக்கியக் கூறும் ஒன்றாகும். எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளக் கூடிய இலக்கியக் கூறாக மட்டுமன்றி ஈழத்து தமிழ் இலக்கியத்திற்குப் புதிய இரத்தம் பாய்ச்சி நிற்கும் ஒன்றாகவும் வளர்ந்து வருகின்றது.

மலையக மக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் பாக இந் நாட்டுக்கு பிரித்தானியர்களால் அழைத்து வரப்பட்டவர்கள். தென் இந்தியத் தமிழர்கள் மத்தியில் இருந்து கூலிகளாகக் கூட்டிவரப்பட்ட இம் மக்கள் சமூகம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் வேலைக்கமர்த்தப்பட்டு கொலனித்துவ சுரண்டலால் உறுஞ்சப் பட்டனர். அதனால் அம் மக்கள் விபரிக்க முடியாத துன்பச் சுமைகளைத் தாங்கி அல்லலுறும் ஓர் சமூகமாக வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த நிலையிலும் அவர்கள் தமது இன, மொழி, கலாச்சாரத் தனித்துவங்களை ஒரு போதும் இழந்துவிடவில்லை. அவற்றை தாம் நிலைபெற்று வாழ்ந்துவந்த இலங்கைச் சூழலில் பேணிப் பாதுகாத்து வளர்த்தும் வந்துள்ளார்கள்.

ஒரு மக்கள் சமூகத்தின் பொருளாதார அரசியல் விழிப்புணர்விற்கான சூழலும் வேகமும் எந்தளவிற்கு வளர்ச்சி பெறுகின்றதோ அந்தளவிற்கே அவர்களது சமூக கலாச்சார விழிப்புணர்வின் உந்துதலும் அமைய முடியும். பிரித்தானியரின் கொடூர சுரண்டல் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்ட மலையக மக்கள் மத்தியில் இந்த நூற்றாண்டின் இருபதுகளிலேயே பொருளாதார அரசியல் விழிப்புணர்வுக்கான வித்துக்கள் தூவப்பட்டன. இதனை பத்திரிகையாளரும், அரசியல், தொழிற்சங்க வாதியுமான கோ. நடேசய்யரும் அவரைப் போன்றவர்களும் துணிவுடன் முன்வைத்தனர். முப்பதுகளின் ஆரம்பத்துடன் பொருளாதார அரசியல் துறைகளில் நாடு



படிப்பகம்

www.padippakam.com

பூராவும் தீவிரமான கருத்துக்கள் வளர்ந்தன. இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்றது. இவை யாவும் மலையக மக்கள் மத்தியில் ஆரம்ப விழிப்புணர்வு வேகம் பெறுவதற்கு அடிப்படைகளாகின. இடதுசாரித் தொழிற்சங்க இயக்கமும், இலங்கை இந்திய காங்கிரஸ் இயக்கமும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேகமாகப் பரவியதுடன் தொழிற் சங்கப் போராட்டங்கள் வெடித்தெழுந்து முன் செல்லும் போக்கு முனைப்படையத் தொடங்கியது.

இத்தகைய சூழலிலே மலையக இலக்கியம் துளிர் விட ஆரம்பித்தது. முப்பதுகளின் ஆரம்பத்துடன் இளம் இலக்கிய வாதியான சி. வி. வேலுப்பிள்ளையும் வேறு சிலரும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள். அவர்களது இலக்கியப் படைப்புகளில் மலையக மக்களின் அவல வாழ்வு வெளிக் கொணரப்பட்டது. இவர்களது இலக்கிய முயற்சிகளைத் தொடர்ந்து ஆங்காங்கே புதிய சில இலக்கியத் துளிர்கள் துளிர்விட ஆரம்பித்தன. இவை யாவும் மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கான ஆரம்பப் பாதையை உருவாக்கி வைத்தன.

நாற்பதுகளின் முற் கூறுகளில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க இயக்கங்களில் — வேலை நிறுத்தப் போராட்டங்களில் அவர்களது பொருளாதார அரசியல் கோரிக்கைகளின் விழிப்புணர்வுக் கனதி உள்ளடங்கி இருந்ததமை நோக்குதற்குரியதொன்றாக விளங்கியது. அவற்றின் தொடர் வளர்ச்சியானது நாற்பதுகளின் பிற் கூறிலே இடம் பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் முழுமையாக வெளிப்பாடடைந்தது.

வர்க்க, இன அடிப்படையில் வெளிப்பாடடைந்த இப் பொருளாதார அரசியல் விழிப்புணர்வின் சாராம்சத்தை மிக உன்னிப்பாக அவதானித்த சிங்கள ஆளும் வர்க்கத்தினர் அதனை முறியடித்து மழுங்கச் செய்யும் நோக்குடன் 1948ல் மலையக மக்களின் அடிப்படைக் குடியியல் உரிமையான பிரசாவுரிமையையும் — வாக்குரிமையையும் நிராகரித்து இல்லாதொழித்தனர். எனவே இவ் அடிப்படை உரிமையை வற்புறுத்தி மீண்டும் அதனை வென்றெடுப்பதற்கான கோரிக்கையும் இயக்கங்களும் மலையக மக்கள் மத்தியில் வளரலாயிற்று. அத்துடன் அவர்களது பொருளாதார சமூகக் கோரிக்கைகளும் இணைக்கப்பட்டு இவை யாவும் மலையக சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அனைத்து சக்திகளாலும் வெவ்வேறு நிலைகளில் போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய நிலையிலே அவற்றின் உடன் நிகழ்வாக இலக்கிய வளர்ச்சியும் முன் செல்வதாயிற்று. ஐம்பதுகளில் இவ் இலக்கிய வளர்ச்சி வேகம் பெற்றதுடன், அறுபதுகளின் தேசிய சர்வதேச சூழலின் உந்துதல்களால் மேலும் முன்னேறிச் சென்றது. அது தேசிய இலக்கியக் கோட்பாடுகளுடன் கை கோர்த்துச் செல்லும் ஒன்றாகவும் மலர்ச்சி பெற்றது. இக் கால கட்டத்தில் சமூக கலாச் சாரத் துறைகளிலான அக்கறை மிக்கவளர்ச்சிப் போக்கு மேலும் பல படிகளைத் தாண்டிச் சென்றது. மலையக மக்கள் சமூகத்தில் கல்விக்கான ஆர்வமும், உயர் கல்வி பெற்றவர்களின் சிறு தொகை யும் கவனத்தைக் கவரக் கூடிய ஒன்றாக விளங்கியது. ஏற்கனவே சி. வி. போன்ற ஆளுமை மிக்க சமூக, இலக்கிய வாதிகள் உரு வாக்கிய இலக்கியம் பாரம்பரியம் வளர் திசையில் மேலும் வளர்வதாயிற்று. கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற இலக்கியத் துறைகளில் மலையகப் படைப்பாளிகள் மேன் மேலும் தோற்றம் பெற்று வளர்ந்தனர். உயர் கல்வி பெற்றவர்கள் இடை நிலைக் கல்வியை முடித்தவர்கள், ஆரம்பக் கல்வியைப் பெற்ற தொழிலாளர்கள் (இத்தகையோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டதாக இருந்த போதிலும்) ஆகிய இளம் தலைமுறையினர் மத்தியில் இருந்து தோன்றிய இலக்கியப் படைப்பாளிகள் ஈழத்து இலக்கியத்திற்கு தமது பங்களிப்பை வழங்குபவர்களாக மாற்றம் பெற்றனர். ஆக்க இலக்கியத் துறையில் மட்டுமன்றி நாடகங்கள், இசைக் குழுக்கள் போன்றவற்றின் வளர்ச்சியும் குறிப் பிடத் தக்கவையாக அமைந்ன. பருவ கால கலை இலக்கிய இதழ்களும், சிற்றேடுகளும் மலையகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கின. நாளடைவில் அவற்றின் எண்ணிக்கையும் தரமும் வளர்வதாயிற்று. நாளிதழ்கள் வார இதழ்கள் போன்றவற்றில் மலையகப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் தனித்துவத்துடன் தொடர்ந்து வெளிவரும் நிலைகள் வளர்ந்தன. அவை யாவும் மலையக கலை இலக்கியத்தின் வளர்ச்சியையும், தனித்துவத்தையும் புலப்படுத்தி நின்றன. மலையக மக்கள் மத்தியில் நாட்டார் பாடல் கள், கதைப் பாடல்கள், காமன் கூத்து போன்றன வாய் மொழி கலை இலக்கிய வடிவங்களாக இருந்து வந்த அதே வேளை புதிய கலை இலக்கிய வடிவங்கள் சம காலத்தின் தேவைக்கேற்ப வளர்ச்சி கண்டது. இவை யாவும் நீண்டதோர் ஆய்வுக்குரிய கருப் பொருள் என்பதை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரும் கூர்ந்து நோக்க வேண்டியதாகும்.

இத்தகைய மலையக கலை இலக்கிய வளர்ச்சி இன்று அண் மைய வருடங்களில் புதிய கட்டத்தினுள் பிரவேசித்துள்ளமையை



படிப்பகம்

www.padippakam.com

இனம் காணலாம். அதற்குரிய அடிப்படையாக அமைந்துள்ளமை மலையக மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் தேசிய உணர்வு நிலையேயாகும். நாம் இந்த நாட்டின் மக்கள் சமூகம் என்பதையும், எமது பிரதேசம் நாம் நீண்ட காலம் வாழ்ந்து வந்த மலையகப் பிரதேசம் என்பதையும், எமக்குரிய அடிப்படை ஜீவாதார உரிமைகள் எவ்வகையிலும் மறுக்கப்படக் கூடியவை அல்ல என்ற உணர்வும் இன்றைய மலையக இளம் தலைமுறையினரிடத்து ஆழமானதொன்றாக வளர்ந்து வருகின்றது. தாம் ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்பதை வலியுறுத்தி பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்து வரும் யதார்த்தத்தைக் கண்டு கொள்ளும் அதே வேளை தாங்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு வந்த வரலாற்றுச் சூழலை மாற்றி அமைக்க முன் வந்துள்ள புதிய தலைமுறையின் எழுச்சிக் குரல்கள் அவர்களது அரசியல் கோரிக்கைகளில் சங்கநாதமாக ஒலிக்கத் தொடங்கி உள்ளன. அதன் பிரதிபலிப்பை இன்றைய கலை இலக்கிய வடிவங்களிலேயும் காண முடிகின்றது.

இவ்வாறு கூறும் போது மலையக கலை இலக்கியம் யாவும் ஒரே திசையில் ஒரே குரலில் சவால்கள் எதுவுமற்றுச் செல்கின்றது எனக் கொள்ள முடியாது. சமூக அக்கறையும் சமுதாய மாற்றமும் வேண்டி நிற்கும் கலை இலக்கிய வளர்ச்சியே வற்புறுத்தத் தக்கவையும் வளர்க்கப்பட வேண்டியவையுமாகும். இருப்பினும் எதிர் நிலைக் கலை இலக்கியப் போக்கினை வளர்க்க முனையும் சக்திகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டும் வருகின்றன. நமது கலை இலக்கியம் யாவும் தென் இந்தியக் கலை இலக்கியங்களே எனக் கூறி அங்கிருந்து தரமற்ற வர்த்தக நோக்கிலானவற்றையும் வரவழைத்து மக்களை திசை திருப்பி மலையக கலை இலக்கிய வளர்ச்சியின் தனித்துவங்களை சிதைத்துவிட முயலும் சக்திகள் வெளிப்படையாகவே செயலாற்றி வருகின்றன. அதே வேளை அரச சார்பற்ற அந்நிய — உள் நாட்டு நிறுவனங்களும் மதம் மாற்றும் நிலையங்களும் கலை இலக்கியத் துறையினுள் பிற்போக்கான பாதைக்கு மலையக மக்களைத் திருப்பி விட மறைமுகமாக முயலுகின்றன. இவை இரண்டும் மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு எதிரே தோன்றியுள்ள பாரிய சவால்களாகும்.

இவற்றை எதிர் கொண்டு முறியடித்து மலையக கலை இலக்கிய வளர்ச்சியின் பயணத்தை உரிய பாதையில் முன்னெடுக்க வேண்டும் சமூகப் பொறுப்புணர்ச்சியும் — அக்கறையும், கொண்ட அனைத்து கலை இலக்கிய சக்திகளும் தீவிர செயற்பாட்டுடன் இயங்க வேண்



படிப்பகம்

www.padippakam.com

# பொறுப்பு

✳ வசந்

அந்த இடத்துக்கு வந்ததும் சயிக்கிள் - பெடலை அழுத்துவதை எனது கால்கள் தானாகவே நிறுத்துகின்றன. சயிக்கிள் தன் வேகத்தைக் குறைத்து மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. எனது கண்கள் அந்த ஒற்றைப் பனை மரத்தைத் தேடின. அவனைக் காணவில்லை. "எங்க போயிருப்பான்" என்று எனக்குள் கேட்டவாறு பெடலை மெதுவாக மிதிக்கின்றேன்.

"அண்ணா" குரல் வந்த திசையை நோக்கியபடி கால்களை ஊன்றி நின்றேன். றோட்டுக்குப் பக்கத்திலே உள்ள நாயுண்ணிப் பத்தையிலேயிருந்து அவன் வெளிப்பட்டான். கறள் படிந்த தன் காற்சட்டையின் செயினை மிகவும் கஸ்ரப்பட்டு ஆட்டி, ஆட்டி இழுத்தபடியே ஓடி வந்தான். வெள்ளையாக உப்புப் பூர்த்து புழுதி படிந்திருந்த அவனுடைய கால்களில் சிறுநீர் சிதறுப்பட்டு கோடு கோடாக படிந்திருந்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட நான் எனக்குள் சிரித்தவாறே கால்களை ஊன்றி நின்றேன். அவன் ஓடிவந்து பின்னால் ஏறிக் கொண்டான். என் சயிக்கிள் நகர்ந்தது.

கொஞ்ச நாட்களாகவே அவனுக்கும் எனக்கும் இந்த உறவு தொடர்ந்து கொண்டிருந்தது.

சில நாட்களுக்கு முன் ஒரு நாள் வழமையாக நான் வேலைக்குச் செல்லும் நேரத்துக்கு சயிக்கிளில் வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னே சில யார் தூரத்துக்கு அப்பால் நாலைந்து சயிக்கிள்கள் சென்று கொண்டிருந்தது. சென்று கொண்டிருந்த ஒவ்வொரு சயிக்கிளையும் பார்த்து "அண்ணை வரட்டே ...அண்ணை வரட்டே?" என்று கேட்டபடியே நடந்து கொண்டிருந்தான். எந்தச் சயிக்கிள்களும் அவனுக்கு இடம் தரவில்லை. பின்னால் வந்து கொண்டிருந்த என்னையும் பார்த்து "அண்ணை வரட்டே?" என்று கேட்டான்.

வேலைக்குச் செல்லும் அவசரமும் முன்னுக்குச் செல்பவர்கள் அப்படியே பின்பற்றும் ஒரு மனப் போக்கும் எனக்குள் இணைய முகத்தை சற்று இறுக்கமாக வைத்துக் கொண்டே "சயிக்கிள் சரியில்லை" என்று சொல்லி விட்டு அவனைக் கடந்து வந்துவிட்டேன். ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

சயிக்கிளின் வேகத்தோடு சிறிது தூரம் ஓடிக்கொண்டே கெஞ்சிக் கேட்ட அந்தப் பிஞ்சு முகத்தின் சாயல் என் நெஞ்சை நன்றாகவே அழுத்தி விட்டது. சயிக்கிள் பழசுதான். கிறிஸ் கூட இல்லாமல் இறுகிப் போய்க் கிடந்தது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில் ஒருவருக் கொருவர் உதவ முடியாத நிலை. இருந்தாலும் இந்த நேரத்தில் தானே ஒருவருக் கொருவர் உதவ வேண்டும். எனது நடத்தைக்காக அன்று மனம் வருந்தினேன்.

அடுத்த நாள் பின்னால் வரும் சயிக்கிள்களை திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அதே வீதியில் அவன் நடந்து கொண்டிருந்தான். எனது முகத்தையும் திரும்பிப் பார்த்துவிட்டு நிலத்தைப் பார்த்தபடி நடந்தான். ''தம்பி வாரும்'' அவனுக்கு முன்னால் சயிக்கிலை நிறுத்திக் காலை ஊன்றுகிறேன். முக மலர்ச்சியுடன் ஓடிவந்து முன்னால் ஏறினான்.

கொஞ்சம் பெரிதாக வளர்ந்த தலைமுடி, சீவாமல் ஒழுங்கில்லாமல் கிடந்தது. கண்கள் பெரிய குழி விழுந்தது போல் தாண்டிருந்தது. முகம் சுருங்கி, வாடிக் கறுத்திருந்தது. அழுக்கு படிந்திருந்த அவனுடைய சட்டையில் ஆங்காங்கு பல ஒட்டைகள். தெறியைப் பூட்டாததால் கழுத்துக்குக் கீழே உள்ள அவனுடைய எலும்புகள் இரண்டும் சேட் கொலரை விலக்கி கொஞ்சம் வெளியே எட்டிப் பார்த்தது. கறுப்பு நிறத்திலே உள்ள காற்ச் சட்டையின் கிளிசலை மறைக்கவோ, அல்லது வெடிவிற்காகவோ மண்நிறத் துணியில சிறு வட்டமாக கையால் தைக்கும் ஊசியால் ஒரு பொருத்துப் போட்டிருந்தது. மெலிந்துபோன அவனுடைய கை, கால்களும் தெறி பூட்டாததால் காற்றுப்

---

மலையக ... 32 ம் பக்கத் தொடர்ச்சி

டியது இன்றைய சமூகச் சூழலின் தேவையாகும். இத் தேவையை நிறைவு செய்ய முற்படும் போது மலையக கலை இலக்கிய சக்திகள் வடக்கு கிழக்கு உட்பட ஏனைய பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் கலை இலக்கிய வாதிகளுடனும், தமிழகத்தின் முன்னோக்கிச் செல்லும் கலை இலக்கியப் பரப்புடனும் தம்மை இறுகப் பிணைத்துக் கொள்ளல் வேண்டும். மேலும் புலம் பெயர்ந்த தமிழ் இலக்கிய வளர்ச்சியுடனும் மலையக இலக்கியம் நெருக்கம் கொள்வதனால் பயன்களைப் பெற முடியும். இவையாவும் முழுமை பெறும் போதே மலையக கலை இலக்கியமும் எழுத்தாளர்கள்—கலைஞர்களும் பூரணத்துவத்தை நோக்கிய தமது பங்களிப்பினை மேலும் ஈழத்து கலை இலக்கியத்துறைக்கு வழங்க முடியும். O



படிப்பகம்

www.padippakam.com

பட்டுத் திறந்து கிடந்த, அவனுடைய சட்டைக்கூடாக தெரிந்த விலா எலும்புகளையும் 'எக்ஸ்ரே' படம் பிடிக்காமலே எண்ணி விடலாம் போலிருந்தது. ஏழெட்டு வயது மதிக்கத் தக்க அந்தச் சிறுவனுடைய தோற்றத்தில் வறுமையின் கோடு மிகத் தெளிவாகவே தெரிந்தது.

என்னுடைய கால்களின் இரு குதிகளையும் பாதி ரயரிலும், பாதி றிம்மிலும் படும்படி சேர்த்து அமத்தி சயிக்கிளை ஒரு மாதிரி நிப்பாட்டுகிறேன்.

“தம்பி உங்கட இடம் எது?”

''புங்குடு தீவு. அகதியாய் வந்தனாங்கள்.''

''உன்ர பேர்?''

''தர்மராஜா''

''அப்பாவுக்கு?''

''செல்வராசா''

''அண்ணைமார் இருக்கினமே?''

''அண்ணை இல்லை, ரண்டு அக்காவும், ஒரு தம்பியும்''

''அப்பா என்ன வேலை செய்யிறவர்?,'

''அப்பாவுக்கு 'ஷெல்' பட்டு கால் நடக்கமாட்டார். இப்ப காய்ச்சல். சுகமில்லாமல் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார்''

ஏழைகள் எப்போதும் பெயரளவிலே தான் செல்வங்களாகவும் ராஜாக்களாகவும் இருக்க முடியும். ஆனால் அவர்களுடைய நிஜமான வாழ்க்கை ...? அவனுடைய கதையைக் கேட்க எனக்கு பரிதாபமாக இருந்தது. இன்று எங்கள் நாட்டைப் பொறுத்த வரையிலே கிட்டத்தட்ட எல்லோருடைய நிலையும் பரிதாபமானது தானே என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்ட நான் “தம்பி நீர் படிக்கப் போறேலையே?” என்று கேட்டேன். “இல்லை” என்று சொன்னவன் அவசரமாக ''அண்ணை நான் இதில இறங்கப் போறன்'' என்றான். அந்த தொட்டிலடிச் சந்திக்குக் கொஞ்சம் பின்னுக்காகவே இறக்கி விட்டேன்.

அன்றிலிருந்து குறிக்கப்பட்ட நேரத்துக்கு வரும் பஸ்சுக்கு காத்திருந்து ஏறுபவனைப் போல் என்னுடைய சயிக்கிளின் வருகைக்காக காத்திருப்பான். பின் வேலை முடிந்து வரும் போது ஏறி வருவான். ஒரு நாளைக்கு தொட்டிலடிச் சந்தி, ஒரு நாளைக்கு சீரணிச் சந்தி, ஒரு நாளைக்கு மருதடி பிள்ளையார் கோயிலடி இப்படி அவன் இறங்கும் இடமும், ஏறுமிடமும் நாளுக்கு நாள் மாறுபடும். இப்படியே எங்கள் இருவருக்கும் இந்தப் பயணம் தொடர்ந்தது. நான் அவனிடம் நீ எங்கு போகின்றாய், என்ன வேலை செய்கின்றாய் என்றெல்லாம் கேட்க வேண்டும் என்று எண்ணுவேன். பின் ஏனோ கேட்காமல் விட்டு விடுவேன். அன்று எப்படியும் கேட்பது என்று



படிப்பகம்

www.padippakam.com

முடிவு செய்து கொண்டு வந்த போதுதான் அவனது செயல் எனக்கு அதிர்ச்சியை யூட்டியது.

அந்தச் சிறுவன் சீரணிச் சந்தியில் நின்று போவோர் வருவோரிடம் கையை நீட்டி காசு வாங்கிக் கொண்டிருந்தான். முன்னம் தொட்டிலடிச் சந்தி வருமுன்னமே இடையில் அவன் இறங்கியதற்கான காரணம் இப்போது தான் எனக்கு புரிந்தது. "ஏன் இவன் என்னிடம் தான் கை நீட்டிக் காசு வாங்குவதை மறைக்க முயன்றான்." என்று எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன். பின் தான் காசு வாங்குவது எனக்குத் தெரிந்தால் என்னிடமும் காசு கேட்பேனென்று தன்னை சயிக்கிளில் ஏற்றாமல் விடலாம்; இதனால் தன்னுடைய பயணம் தடைப்படலாம். என்ற நினைப்பில் அவன் இதை என்னிடம் மறைக்க முயன்றிருக்கக் கூடும் என நினைத்துக் கொண்டே அவனுக்குப் பக்கத்தில் சயிக்கிலை நிப்பாட்டினேன்.

அவனுக்குப் பக்கமாக வந்த ஒருவர் அவனிடம் காசை நீட்ட என்னைப் பார்த்துவிட்டு கொஞ்சம் தயக்கத்துடன் அவரிடம் காசை வாங்கினான். பின் என்னைப் பார்க்காமல் தலையைக் குனிந்தபடி நிலத்தைப் பார்த்தான். "ஏறும்" என்றேன். பின்னால் ஏறினான்.

கொஞ்சத் தூர மௌனத்திற்குப் பின் 'எவ்வளவு சேர்ந்தது?'' என்று கேட்டேன். ''பத்து ரூபா'' என்றான். ''ஏன் தம்பி படிக்கிற வயதில இப்பிடி கை நீட்டி காசு வாங்கிறது வெட்கமாயில்லையே? இப்பவே உந்தப் பழக்கம் பழகினால் உன்ர எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துப் பார்த்தியே?'' கொஞ்சம் கடுமையாகவே கேட்டேன். "அப்பாவுக்கு சுகமில்லை. மருந்து வாங்க காசு வேணும்.'' பயந்தவன் போல் கொஞ்சம் மெதுவாகச் சொன்னான். எனக்கு கோபம் சற்றுக் கடுமையாகவே வந்தது.

முன்பும் ஒரு முறை இப்படித் தான் கடையில் வேலை செய்து கொண்டிருக்கும் போது இரண்டு சிறுவர்கள் "அண்ணை பசிக்குது காசு தாங்கோ'' என்றார்கள். ''உங்களுடைய அப்பா அம்மாக்கள் எங்கே?'' என்று கேட்டேன். "அம்மா வீட்டில இருக்கிறா அப்பா செத்துப் போனார்.'' என்று சொன்னார்கள். ''வீடு எங்கே?'' என்று கேட்டேன். 'அகதிகள்' என்றும் ரெயில் ஸ்ரேஷனில் இருப்பதாக சொன்னார்கள். "வா உங்கடை அம்மாவிட்டை போய்க் கேட்பம். அப்பா இருக்கிறாரோ செத்துப் போனாரோ என்று.'' கேட்டவாறு அவன் கையைப் பிடித்து இழுத்தேன். வர மறுத்தவன் ''அப்பாவுக்கு சுகமில்லை ஆஸ்பத்திரியில்'' என்றான்.



படிப்பகம்

www.padippakam.com

''இந்தப் பழக்கமெல்லாம் கூடாது. ஒடுங்கோ'' என்று கலைத்து விட்டேன்.

இந்தச் சம்பவம் எனக்கு ஞாபகத்துக்கு வரவே, 'உப்பிடி எத்தினை பேரிட்ட எத்தினை கதை சொல்லியிருப்பியள்? அப்பா செத்துப் போனாரெண்டும், சுகமில்லையெண்டும். கள்ளத் தீனி வாங்கித் தின்னுறதுக்காக இந்த வயதிலையே பொய் சொல்லப் பழகிவிட்டியள். என்ன? உங்களை ஏத்திக் கொண்டு வாறதே பாவம்'' என்று சற்றுக் கடுமையாகவே பேசிவிட்டேன். அவன் எதுவுமே கதைக்கவில்லை. மௌனமாக இருந்தான்.

அவன் இறங்கும் அந்த ஒற்றைப் பனையடி வந்தது. வழமையாக அவன் இறங்கிப் போகும் போது ''அண்ணை போட்டு வாறன்'' என்று கூறி விட்டுப் போவான். நானும் ''சரி'' என்று தலையாட்டி விட்டு செல்வேன். ஆனால் இன்று சயிக்கிலை நிற்பாட்டினது பாதி நிற்பாட்டாத பாதியாக அவனை இறக்கி விட்டு அவனுடைய பதிலை எதிர்பாராமல் பெடலை அவசரமாக மிதிக்கிறேன்.

மறு நாள் அவனைக் காணவில்லை. நான் கவனிக்கவுமில்லை. அதற்கு அடுத்த நாளும் இல்லை. மூன்றாம் நாள் நான் வேலை முடிந்து வந்து கொண்டிருந்தேன். மருதடிச் சொஞ்சப் பேர் கூட்டமாக நின்றார்கள். ''என்ன ஏதோ அடிபட்டுப்போச்சே?'' என்று கேட்டேன் ''ஒரு பெடியன் மயங்கி விழுந்து போச்சு அதுதான்'' நின்ற ஒருவர் கூறினார். ''உந்தப் பெடியன் உந்தச் சந்தியளிலை நின்று காசு வாங்கினவன். பசி போல அது தான் மயங்கி விழுந்து போனான்'' இது இன்னொருவர். சிறிது பதற்றத்துடன் அவசரமாக சயிக்கிலை நிப்பாட்டி விட்டு கூட்டத்தை விலக்கிப் பார்க்கிறேன். அந்தச் சிறுவன் தான். யாரோ ஒருவர் வாங்கிக் கொடுத்த தேனீரையும் பணிசையும் வாங்கி சாப்பிட்டு விட்டு சோர்வுடன் அமர்ந்திருந்தான். என்னைப் பார்த்ததும் மெதுவாக தலையைக் குனிந்து கொண்டான்.

''தம்பி எழும்பும் வீட்டுக்குப் போவோம்'' என்றேன், மெதுவாக எழும்பினான். நின்றவர்கள் என்மீது ஒரு மாதிரியான பார்வைக் கணைகளை வீசியபடி வழி விட அவனை முன்னால ஏற்றிக் கொண்டு சயிக்கிலில் ஏறினேன்.

அவன் இறங்கும் அந்த ஒற்றைப் பனையடி வரும் வரைக்கும் எதுவுமே பேசாமல் மௌனமாக வந்த நான், அந்த பனையடிக்குக் கிட்ட வந்து ''உங்கட வீடு எங்கே?'' என்று கேட்டேன். ''இந்தப் பனைவளவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அங்காலை" என்று அந்த பனைக் குப்பக்கமாக சென்ற மண்பாதை யைக் காட்டினான். அவன் காட்டிய பாதையில் சயிக்கிலை திருப்பினேன். சில வளைவுக ளைக் கடந்து அவன் காட்டிய இடத்திலே என் சயிக்கிள் நின்றது.

கிடுகினால் வேயப்பட்ட சிறிய குடிசை. ஓலைகள் உக்கி ஈக்குகள் நீளமாகத் தெரிந்தது. முற்றத்திலே ஒரு சிறுவன் விளை யாடிக் கொண்டிருந்தான். கிழிந்த பாயிலே பெரியவர் ஒரு வர் இருமியபடி கிடந்தார். நாற்பது வயது மதிக்கத் தக்க அந்த தாய் சட்டை ஒன்றை கையினால் தைத்துக் கொண்டி ருந்தாள். அவனுடைய சகோ தரிகள் இரண்டு பேரும் என் னைக் கண்டவுடன் உள்ளே ஓடிப் போனார்கள். பொருத்து வைத்துத் தைத்தும் ஆங்காங்கு ஓட்டைகள் விழுந்திருக்கும் தங் களின் சட்டைகளின் கிழிஞ்சல் களை மறைப்பதற்காக கிழிந்த அந்தக் கிடுகுக்குப் பின்னால் மறைந்து நின்று எட்டிப் பார்த் தார்கள்.

எனக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. எவ்வளவு தவறாக அந்தச் சிறுவனை நினைத்து விட்டேன். அவனு டைய நிகழ்காலமே கேள்விக் குறியாக இருக்கும் போது நான் அவனது எதிர்காலத்தைப் பற்றி எல்லாம் பேசியது எவ்வளவு தவறு ...? இராணுவ நடவடிக் கையால் மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப் பட்டிருக்கி றார்கள்! ஊர் இழந்தவர்கள், வீடிழந்தவர்கள், வேலையிழந்த வர்கள், கை, கால் இழந்தவர் கள், குடும்பங்களைப் பிரிந்தவர் கள் இப்படி எத்தனை ... எத்தனை துன்பங்கள்? சீரான படிப்பு வசதிகள் இல்லாமல் எங் களுடைய சமுதாயத்தின் ஒரு எதிர்காலமே சூன்யமாக...! இப் படி அந்தச் சூழல் என்னை பல வாறு சிந்திக்க வைத்தது.

"ஆர் தம்பி ... வாரும் வாரும்"

அந்தக் கொட்டிலுக்குள் நீண்டு படுத்திருந்த அந்த வய தானவர் சிரமத்துடன் எழுந்து இருந்தபடி வரவேற்கிறார்.

"இந்தண்ணை தான் என் னை ஒவ்வொரு நாளும் ஏத்திக் கொண்டு போறவர்"

"நீங்கள் நல்லா இருப்பியள் தம்பி. நாங்கள் உழைச்சு சாப் பிட்டநாங்கள் தம்பி. இவனை எங்கையாவது நிரந்தரமா ஒரு வேலைக்குச் சேர்த்து விட்டா பெரிய உதவியா இருக்கும் தம்பி"

"எங்கையாவது சேத்துவிடு வீங்களா?

அந்த தந்தையின் கேள்விக் கும் சிறுவனுடைய கேள்விக்கும் பதில் சொல்ல முடியாமல் வேத னையுடன் மண்ணைப் பார்க்கி றேன். "சரி எங்கையாவது கேட் டுப் பார்க்கிறேன்" ஒரு பெரு மூச்சுடன் சொல்லி விட்டு எனது சயிக்கிள் செலவுக்கென்று வைத் திருந்த பத்து ரூபாவை எடுத்து அவனது கையில் வைத்து விட்டு பேசாமல் அந்த வீட்டை விட்டு வெளியேறுகிறேன். ★



படிப்பகம்

www.padippakam.com

# அஞ்சலைக்கு அஞ்சலி

அஞ்சலையே
கண்ணீரை கரைத்தெடுத்து
காவியாக்கி — உன்
கல்லறை
அரண்மனைக்கு
அஞ்சலி செலுத்துகிறேன்!

காடைத் தனத்தின்
கடைசியெல்லை
எண்பத்தி மூன்றிலே
எரியுண்டபோது
உன் உடலும்
பலாத்கார பிடியிலே
பல மிழந்து போனது!

நீ திரௌபதைதான்
ஆனால்
கண்ணனே
துயிலுரியக் கட்டளை
இட்ட போது
கலங்கிப் போனாய்!
தெய்வமாயிருந்திருந்தால்
மார்பை அறுத்தெறிந்து
மானிலத்தை எரித்திருப்பாய்

மாத்தளை மாரியே
தீயின் வெம்மைக்கு
தீக் கிரை யானாளே
தன்னையே
காப்பாற்ற
தடுமாறி போனாளே!

என்
கைகளைக் கட்டிவிட்டு
உன்
கற்பை பிடுங்கியதால்
வெறித்து எழுந்தபின்னே
வீரியம் இழந்து
போனேன்!

எஸ். பன்னீர்செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

சொறி பிடித்த
நாய்களெல்லாம்
வெறிபிடித்து உன்னுடலை
ஊளையிட்டு
நின்றபோது
மதிகெட்ட மைந்தனாக
மண்ணிலே யிருந்தேனே!

தங்கையே............
தீயின் வெம்மையில்
அம்மாவும் அப்பாவும்
அவிந்து போனாலும் — நீ
சாம வெப்பத்தில்
அல்லவா — கரைந்து
போனாய்!

அம்மாடி ..........
வீரபத்திர தண்டவம்
விண்ணெங்கும் அதரியெழ
உன்னிழப்பை
உணாந்தபின்னே
மனிதம் எழுகுமம்மா!

நாடு எங்கும்
உனைப் போலே
ஆயிரம் சோதரிகள்
அவமானப்பட்டுபட்டு
அழுது வடித்த நீர்
கங்கையாய் பெருக்கெடுக்கும்!

தீயோரின் ஊனுடலை
தின்று பசி தீர்க்கும்!

அஞ்சலையே
கண்ணீரைக் கரைத்தெடுத்து
கவியாக்கி — உன்
கல்லறை அரண்மனைக்கு
அஞ்சலி செலுத்துகிறேன்
''அமைதியாய் உறங்கு''

நன்றி
குன்றத்து குமுறல்
தாயகம் 25



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
Registered as a Newspaper in Sri Lanka

www.padippakam.com


★ தரமான

நூல்கள்

- குன்றின் குரல்
- சுபமங்களா
- விருட்சம்
- மூன்றில்
- ச[illegible]ணம்
- துளிர்[illegible]
- வெளி,

முதலிய சஞ்சிகைகள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

# வசந்தம் புத்தக நிலையம்

405 அர்ச்சுனா வீதி யாழ்ப்பாணம்


இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 15/1, மின்சார நிலைய வீதியிலுள்ள க. தணிகாசலம் அவர்களால் யாழ்ப்பாணம் 407, அருச்சுனா வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.